# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆடி 17 ஞாயிற்றுக்கிழமை (02 08 1998) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 211


**செம்மணி சூடு பிடிப்பு**

## கையெழுத்து இயக்கம் நடத்துவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 2

செம்மணி புதை குழி விவகாரம் தொடர்பான நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு கோரி யாழ்ப்பாணத்தில் கை எழுத்து இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

பொதுமக்கள், பொது அமைப்புகள், சமய நிறுவனங்கள் இது தொடர்பான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

இதற்கு முன்னோடி நடவடிக்கையாக யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் ஒருகலந்துரையாடல் எதிர்வரும் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் நீதிக்கும் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு, மக்கள் சக்தி கழகம், நீதிக்கும் சமாதானத்துக்குமான குழு, கைதானோர்; காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் போன்றவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## புலிகளுடன் பேச்சு நடத்துவது மூலமே யுத்தத்துக்கு முடிவு காண முடியும்

### வெளிநாட்டுப் பத்திரிகையாளரிடம் மேயர்

யாழ்ப்பாணம், ஒக. 2

''தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் தான் தொடரும் யுத்தத்துக்கு முடிவு காண முடியும்''

இவ்வாறு யாழ். மாநகர மேயர் பொன். சிவபாலன் நேற்று தம்மைச் சந்தித்த வெளிநாட்டு பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

சார்க் மாநாட்டையொட்டி கொழும்பு வந்த வெளிநாட்டு பத்திரிகையாளர்களில் ஒரு பிரிவினர் நேற்று யாழ். நகருக்கு விஜயம் செய்தனர்.

யாழ். மாநகர மேயரை நேற்று அவரது அலுவலகத்தில் வைத்து இந்தப் பத்திரிகையாளர்கள் சந்தித்தனர்.

பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மாநகர மேயர் மேலும் கூறியதாவது:

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் அரசுக்கு அக்கறை இருக்குமானால் முதலில் யுத்த நிறுத்தம் செய்து மக்களுக்கு நம்பிக்கை ஊட்டக்கூடிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

யுத்த நிறுத்தம் செய்த பின்பு இரு தரப்பு பேச்சுவார்த்தைகளுக்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும்.

தமிழர்கள் சுய மரியாதையுடன் வாழக் கூடிய, சுயநிர்ணய உரிமையைக் கொண்ட தீர்வே அவசியம்; அதைத்தான் தமிழர்கள் ஏற்றுக் கொள்வார்கள்.

நாங்கள் எல்லோரும் ஒரே இலட்சியத்தைக் கொண்டவர்கள். விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்டத்தின் மூலம் இலட்சியத்தை முன்னெடுக்கிறார்கள். நாங்கள்

(10ஆம் பக்கம் பார்க்க)

# முழு நேர மின் விநியோகம் மேலும் தாமதம் அடையலாம்

## பேரிரைச்சலை குறைக்க சிங்கப்பூரிலிருந்து கருவி

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 2

குடாநாட்டுக்கு 24 மணி நேரமும் மின்சாரம் வழங்கும் திட்டத்தில் மேலும் தாமதம் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இம்மாத இறுதியில் மின்சாரம் வழங்கத் திட்டமிடப்பட்டிருந்தது. அனேகமாக செப்டெம்பர் நடுப் பகுதியிலேயே இதனை வழங்க முடியும் என்று தற்பொழுது கூறப்படுகிறது.

குடாநாடு முழுவதுக்கும் 24 மணி நேர மின்சாரம் வழங்குவதற்காக ஏற்கனவே 8 பாரிய ஜெனரேட்டர்கள் கொண்டு வரப்பட்டிருப்பது தெரிந்ததே.

ஒரு மாதத்துக்கு முன்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு நிமிட அழைப்புக்கு வசதி

யாழ்ப்பாணம், ஒக. 2

யாழ். வேம்படிச்சந்தி, மந்திகை ஆகிய இடங்களில் உள்ள ரெலிக்கொம் நிறுவனத்தின் சர்வதேசதொலைத் தொடர்பு நிலையங்களில் ஒரு நிமிட அழைப்புக்களையும் ஏற்படுத்திக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ரெலிக்கொம் நிறுவனத்தினால் குறைந்தது மூன்று நிமிட அழைப்புக்களே வழங்கப்பட்டு வந்தன. இதனை நீக்கி தனியார் தொலைபேசி நிலையங்களில் வழங்கப்படுவ

(10 ஆம் பக்கம் பார்க்க)

## உயர் தரப் பரீட்சை நாளை ஆரம்பம்

மட்டக்களப்பு, ஒக. 2

ஜி. சீ. ஈ. உயர் தரப் பரீட்சை நாளை ஆரம்பமாகிறது.

நாடு முழுவதிலும் உள்ள ஆயிரத்து290 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறும்.

இம்முறை புதிய பாடத் திட்டத்தின் கீழ் பாடசாலை மூலமாக ஒரு லட்சத்து 30 ஆயிரத்து 733 மாணவர்களும் —

தனிப்பட்ட ரீதியில் 21ஆயிரத்து 466 மாணவர்களும் —

பழைய பாடத் திட்டத்தின் கீழ் தனிப்பட்ட ரீதியில் 28 ஆயிரத்து 283 மாணவர்களும் — பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

இதேவேளை களுத்துறைச் சிறையில் உள்ள தமிழ்க் கைதிகளில் 293 பேர் உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-21-7)

## பரீட்சை அனுமதி அட்டை காட்டுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒ.க 2

நாளை 3 ஆம் திகதி முதல் யாழ். குடாநாட்டில் ஆரம்பமாகவிருக்கும் ஜி சீ. ஈ. உயர்தரப் பரீட்சை மற்றும் எதிர்வரும் 9 ஆம் திகதி நடை பெறவிருக்கும் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை ஆகியவற்றுக்குத் தோற்றும் மாணவர்கள் தமது பரீட்சை அனுமதி அட்டைகளை வீதிச்சோதனை நிலையங்களில் படையினரிடம் காட்டுவதன் மூலம் சிரமமின்றி தமது பயணத்தைத் தொடர முடியும்.

இவ்வாறு யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் நேற்று விடுத்த விசேட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

பரீட்சார்த்திகள் உடனடியாக பரீட்சை நிலையங்களுக்குச் செல்ல படையினர் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டுமெனக் கோரும் அறிவுறுத்தல்கள் சகல படையினருக்கும் வழங்கப்பட்டுள்ளன.

எனவே பரீட்சார்த்திகள் தமது பரீட்சை அனுமதி அட்டைகளை படையினரிடம் காட்டி விரைவாக பரீட்சை நிலையங்களுக்குச் செல்லலாம் என அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9-7)

## கப்பலுக்கு காத்திருந்த 200 பேருக்கு திருமலையில் தற்காலிக தங்குமிடம்

### கொரியகப்பல்வரும் அறிகுறி இன்னும் இல்லை

திருகோணமலை, ஒக 2

கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வருவதற்காக வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் இருந்து திருமலைக்கு வந்து தங்குமிட வசதிகள் இன்றி தவித்த 200 பேர் திருமலை உள்துறைமுக வீதியில் உள்ள கலாசார மண்டபத்தில் நேற்று தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டனர்.

இவர்கள் திருமலைக்கு வந்து உறவினர்களுடன் தங்கியிருந்தனர் சிலர்லொட்ஜுகளில் தங்கியிருந்தனர்.

தற்போது இவர்கள் பண வசதியின்றி மிகவும் கஷ்ட நிலையில் இருந்ததாலேயே கலாசார விடுதியில் இலவசமாகத் தங்கவைப்பதற்குத் தற்காலிக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதே வேளை காங்கேசன் துறைக்கும், திருமலைக்கும்

(10ஆம் பக்கம் பார்க்க)

## கந்தளாயில் ஆளுநருக்கு எதிராக ஆர்ப்பாட்டம்!

### பொலீஸார் தடுத்தனர்

கொழும்பு, ஒக. 2

வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகாவுக்கு எதிராகக் கந்தளாயில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

எனினும் பொலீஸார் உடனடியாகத் தலையிட்டு ஆர்ப்பாட்டத்தை நிறுத்தினர்.

பிரதேச கல்வி அதிகாரிகள் தொடர்பாக மாகாண ஆளுநர் அனுசரிக்கும் நடைமுறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அல்வாயில் மூவர் கைது!

யாழ்ப்பாணம் ஒக. 2

அல்வாய்ப் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பெண்கள் நேற்று முன்தினம் அதிகாலை கைது செய்யப்பட்டிருப்பதாக பருத்தித்துறையில் உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ம. எண்ணெய் ஏற்றி வந்த லொறி தீப் பிடித்தது!

### 45 பரல்கள் எரிந்து நாசம்

வவுனியா, ஒக. 2

கிளிநொச்சி திருவையாறு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான லொறி ஒன்று 45 பரல் மண்ணெண்ணெயுடன் முற்றாக எரிந்தது.

இச்சம்பவம் நேற்றுக் காலை 8. 45 மணியளவில் முழங்காவில் ஏற்றத்திற்கு அருகில் இடம்பெற்றது.

திருவையாற்றில் இருந்து முழங்காவில் நோக்கி 45

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TO VIEW YOUR
TELEVISION CLEARLY

Please Communicate with the specialists in fitting Television. Antennas and repairing. Radio, Television, Deck, Watch including Electrical Items.

**VEENUS DELKA**
284, STANLEY ROAD,
(Opposite Naga Vigarai)
JAFFNA.
Telephone - 2064

(C/4447)

வட மாகாண
**வங்கி ஓய்வூதியர்**
**நலன்புரிச் சங்கம்**

எமது அலுவலகத்தில் 3-8-98 தொடக்கம் கீழ்க் காணும் சேவைகள் மேற்கொள்ளப்படும்.

1. தமிழ், ஆங்கில தட்டெழுத்து வேலைகள்
2. தமிழ், ஆங்கில, சிங்கள மொழிபெயர்ப்புக்கள்
3. வங்கி வாடிக்கையாளருக்கு ஆலோசனை வழங்கல்
4. தொழில் வாய்ப்புக்கான சுய விவரம் (BIODATA) தயாரித்தல்.

அலுவலக நேரம்: காலை 9.30 மணி தொடக்கம்
பி. ப. 1.30 மணி வரை (புதிய நேரம்)

67, ஸ்ரான்லி வீதி,
'குமரன் விடுதி',
யாழ்ப்பாணம்.

வீ. சகாதேவசங்கரி
செயலாளர்

தொலைபேசி:
அலு. 2201
2204
இல்லம் 2289

(58049)

## கண்ணீர் அஞ்சலி

அண்மையில் சிவபதமடைந்த
மில்க்வைற் தொழிலகத்தின் அதிபரும்,
பிரபல சமய, சமூக அபிமானியும்,
சிவதர்மவள்ளலுமாகிய
பசுமைவேந்தர்
**கலாநிதி க. கனகராசா**
அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஆறுமுகம் ஜீவரட்ணமும்,
சிற்பாலயக் கலைஞர்களும்.

ஆறுமுகம் சிற்பாலயம்,
காளிகோயிலடி, திருநெல்வேலி.
(58052)

**நாகம்ஸ்**
சுன்னாகம்.
கொழும்பு, வவுனியா, திருகோணமலை போன்ற இடங்களில் உள்ள திரை அரங்கில் மகளிர் ஆசனங்கள் நிரம்பி வழிந்து வசூலாக ஓடிய படம்:
அரவிந்தசாமி- ரோஜா
நடித்த
**ரோஜா**
திரைப்படக் கூட்டுத்தாபன (ரீல்ஸ்) படம்.
இனிய பாடல்கள்
நிரம்பியது
காட்சிகள்:- 10-30, 2-30
(58050)

**ராஜா டாக்கீஸ்**
யாழ்ப்பாணம்.
கடைசி வாரம்
கமல் (இரு வேடம்)
மொனிஷா, சுகன்யா,
கவுண்டமணி, செந்தில்
நடித்த
**இந்தியன்**
06 - 08 - 98 முதல்
சிவாஜி நடித்த
**முதல் மரியாதை**
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/4336)

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
இன்றும் நாளையும்
சூர்யா - ப்ரிதா
சரத்பாபு, ராதிகா
நடித்த
**சந்திப்போமா**
செவ்வாய், புதன்
சிவாஜி - சரோஜாதேவி
எம். ஆர். ராதா நடித்த
**பாகப் பிரிவினை**
★ தவிர்க்க முடியாத காரணத்தால் திங்கட் கிழமை காலை 10-30 மணிக்கு இடம் பெறும் காட்சி மட்டும் காண்பிக்கப்படமாட்டாது.
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070-212223
(57502)

## சீநோர் தொழிற்சாலை கட்டடங்கள் திருத்தப்படும்

குருநகர், ஓக. 2

குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலையை மீண்டும் இயங்க வைக்கும் நோக்குடன் இத் தொழிற்சாலையில் சேதமடைந்துள்ள கட்டடங்கள் விரைவில் திருத்தியமைக்கப்படும்.

இத் திருத்த வேலைகளை ஆரம்பிக்க வசதியாக இங்கு தங்கியுள்ள அகதிகள் வேறு இடத்துக்கு மாற்றப்படுவார்கள்.

கடந்த புதன்கிழமை யாழ். நகர படைத் தளபதி பிரிகேடியர் சுசந்த மெண்டிஸுக்கும், குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலை பிரதி பொதுமுகாமையாளர் சி. கஜமுகலிங்கத்துக்குமிடையே நடைபெற்ற கலந்துரையாடலில் மேற்கூறிய உடன்பாடு காணப்பட்டுள்ளதாக சீநோர் நிர்வாகம் தெரிவித்தது. (ஐ-51)

99 - "Organic Che."
Mr. அன்பழகன்
Phy. "HEAT"
Tue. Thurs. 6-15 a.m.
Mr. ஸ்பெல்மன்
2000 - Biology
Mr. திவாகரன்

★ O/L, Yr. 10, 9 & 8
**SHAMROCK**
(சி/4451)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பராசக்தி கதிர்காமநாதன்

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், இல. 50, நாலாவது ஒழுங்கை, உவர்மலை, திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி கதிர்காமநாதன் 28-07-98 இல் கொழும்பில் காலமானார்.

இவர் ஊர்காவற்றுறை பட்டினப் பகுதியின் முன்னாள் கிராம சேவையாளரும், தற்போது ஜேர்மனியில் வசிப்பவருமான நாகமணி கதிர்காமநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வெற்றிவேலு - மெல்லியம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகமணி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், பத்மசீலன் (கனடா), கோமதி (அஞ்சல் திணைக்களம், திருகோணமலை), ஜெயசீலன் (ஜேர்மனி), புனிதசீலன் (ஜேர்மனி), ஹிந்துமதி ஆகியோரின் பாசமிகு தாயாரும், கெளடி, கௌசல்யா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கண்மணி மற்றும் நவமணி, வைத்தியநாதன் (முன்னாள் உத்தியோகத்தர், பட்டின சபை, ஊர்காவற்றுறை), தேம்பாமலர் (நைஜீரியா), தயாநாதன் (ஜேர்மனி), சாரதாதேவி, பத்மாவதி ஆகியோரின் அருமைச் சகோதரியும், நவரத்தினம் (முன்னாள் பதிவாளர், யாழ். கச்சேரி), நாகசுந்தரம்பிள்ளை (முன்னாள் உத்தியோகத்தர், கொழும்பு டொக்யார்ட் லிமிட்டெட்), சாந்தநாயகி, பேராசிரியர் ந. சிவச்செல்வன் (நைஜீரியா), விமலாதேவி, கானமயில்நாதன் (ஆசிரியர், உதயன்), சபாரத்தினம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக் கிழமை (2-8-98) மு. ப. 10.00 மணிக்கு மாதம்பிட்டி பொது மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி கோமதி கெனடி (மகள்)

மே/பா. நா. நாகசுந்தரம்பிள்ளை
478/1 B, அளுத்து மாவத்தை வீதி,
கொழும்பு - 15.
தொலைபேசி: 523703
(சி/4453)

### கந்தையா வெள்ளியம்பலம்
(ஓய்வுபெற்ற தலைமைக் கணக்காளர்)

வட்டுக்கோட்டை கிழக்கைச் சேர்ந்தவரான கந்தையா வெள்ளியம்பலம் 01 - 08 - 98 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா இரத்தினம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான டாக்டர் குருசாமி, நாகரத்தினம் அவர்களின் மருமகனும் மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும் திருமதி பொன்னம்பலம் திருமதி குலசேகரம், காலஞ்சென்ற Dr. குருநாதன் சிவசங்கரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 01 - 08 - 98 அன்று வட்டுக் கிழக்கில் நடைபெற்றன.

தகவல்:
வெ. மங்களேஸ்வரி (மனைவி)

வட்டுக்கிழக்கு,
வட்டுக்கோட்டை
(58036)

### இணுவில் தெற்கு வேலுப்பிள்ளை செல்லத்துரை
(பிரபல சோதிடர்)

இணுவில் தெற்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை செல்லத்துரை (பிரபல சோதிடர்) 1-8-1998 அன்று மாலை 3 மணிக்கு கொழும்பில் சிவபதமடைந்தார்.

அவரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
செ. ஜெயசோதி வரதன்
(வரதன் மாஸ்டர்)

இணுவில்.
(சி/445 4)

## நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு — 11 ஆம் ஆண்டு





திருமதி
**இரத்தினம் அன்னம்மா**
மலர்வு: 15 - 06 - 1935
உதிர்வு: 13 - 08 - 1997

அமரர்
**இரத்தினம் பபிகரன்**
மலர்வு: 08 - 09 - 1970
உதிர்வு: 21 - 10 - 1987

திதி: 02 - 08 - 1998

விரைந்தீர் இருவீரும் விண்ணுலகை நோக்கி
வரைந்தீர் கோலமொன்று வையகத்தின் சாட்சிக்கு
கரைந்தீர் நாள்பல காணாமற் போனாலும்
நினைந்தே வாழ்ந்திடுவோம் நீக்கமற எந்நாளும்!

உங்கள் பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

5/1, ஆனந்தன் வடலி,
3 ஆம் ஒழுங்கை, கொழும்புத்துறை.
(58044)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக வேகத்தில் அலையும் புலன்களை அடக்கி வெல்பவனே உண்மையான வீரன்

"யார் வீரர்?" என்ற வினாவிற்கு விடை காண்பது சிறிது கடினந்தான். வில்லும், வாளும் ஏந்தித் தோள் வலியும், வாள் வலியும் ஓங்கிப் பல லட்சம் வீரர்களைக் கொன்று வென்றவன் வீரனாகான்;

பின்னே யார் வீரர்?

ஆயிரம் குதிரை வேகத்திலும் அதிக வேகத்துடன் ஓடி வந்து அலைந்து திரியும் மனத்தை அடக்கிப் பொறி புலன்களை வென்றவனே சிறந்த வீரனாவான்.

தன்னை அடைந்தார் வினைகளை எல்லாம் தணியச் செய்ததால் தணிகை என்று பேர் பெற்ற, திருத்தணி மலையின் தாழ்வரையில் மர நிழல்களில் இளந்துறவிகள் தவம் செய்கிறார்கள்.

அங்கே மன்மதனையும் வென்ற இளம் மங்கையர்கள் கூந்தல் நிறைய மண மலர் சூடி ஆடிப்பாடி வருகிறார்கள். "கல்" "கல்" என்று சிலம்போசை கேட்கிறது. உருக்கி வார்த்து மெருகிட்ட தங்கச் சிலைகளைப் போன்ற அவர்களைத் திரும்பிப் பாராமல் அத் தவ முனிவர் விழித்திருந்தும் குருடர்களாய் வைரச் சிலைபோல் உள்ளம் உலையாமல் இருக்கின்றார்களாம்.

"ஆ! ஆ! இது என்ன ஆச்சரியம்! எங்களைக் கண்டால் கிழவர்கள் கூடக் காதல் மயக்கம் கொள்வார்களே? இளந் துறவிகள் அப்படியே அணுவளவும் சலனமின்றி இருக்கின்றார்களே? இது பெரிய அதிசயம்!" என்று கூறி வியந்து நிற்கின்றார்கள் அந்தப் பெண்கள். —இதனை அருணகிரியார் கூறுகிறார்.

மாரன் வெற்றிகொள் பூமுடிக்குழலார் வியப்புற நீடுரேய்ந்தவர் வாழ்ந்திருத்தணி மாமலைப் பதி தம்பிரானே.

இன்னொரு சான்று

கயிலையின் தாழ்வரையில் இந்திர நீல பருப்பதத்தில் அருச்சுனப் பெருமான் அரிய பெரிய தவநிலையில் நிற்கின்றான். அசைவற்று நிற்கும் அவனைக் 'கற்றூண்' என்று கருதிய யானை முதலிய விலங்குகள் உடம்பிலுள்ள தினவு தீரத் தேய்க்கின்றன.

## ஊர்வசிக்கும் மயங்காத அர்ச்சுனன் உதாரணம்

புற்று மூடியது; பூங்கொடிகள் படர்ந்தன. அரவினங்கள் குடியிருந்தன. மழை, பனி, வெயில் இவைகளை உணராமல் தவம் புரிந்தான்.

கருந்துருத லெனக் கருதிப்
பிடியுங் கல்லுங்
களிற்றினமும் உடனிரிஞ்சக்
கரையான் ஏறிப்
பொருந்து முழைப் புற்றுத்
தெனப் புயங்கம் ஊறப்
பூங்கொடிகள் மரனன்று
பாங்கே சுற்றப்
பரிந்துவெயில்நாள், மழைநாள்,
பனி நாள் என்று
பாராமல் நெடுங்காலம் பயின்
றான்; மண்ணில்
அருந்தவமுன் புரிந்தோரில்
இவனைப் போல் மற்றார்
புரிந்தார் சிவசிவ என்றரிய
வாறே,

இந்திரன் ஏவலாம் ரம்பை, மேனகை, திலோத்தமை, ஊர்வசி என்ற அரம்பை மாதர்கள் அருச்சுனனுடைய தவநிலையைச் சோதிக்கும் பொருட்டு வந்தார்கள். அவர்களுக்குப் பரிவாரமாக மயில், குயில், வண்டு, அன்னம், தென்றல் முதலியனவற்றுடன் மன்மதனும் வந்தான். அருச்சுனன் முன் ஆடினார்கள்; பாடினார்கள்.

விசுவாமித்திரன் முதலிய அருந்தவரும் அவர்களைக் கண்டு மயங்குவார்கள். அருச்சுனன் மயங்கினானில்லை. விழித்திருந்தும் அவர்களைக் காணவில்லை. செவியிருந்தும் இன்னிசையைக் கேட்கவில்லை. அவர்கள் என்ன என்ன சாகசங்களையோ செய்தார்கள். அருச்சுனன் அணுத்துணையும் அசைந்தானில்லை. கற்சிலை போல் நின்றான்.

பாசுபதம் பெற்றான்

துரியோதனனால் ஏவப்பட்ட மூகாசுரன் மலை போன்ற வடிவுடன் அருச்சுனனைக் கொல்ல வந்தான். கயிலை மேவிய கண்ணுதற் கடவுள் வேட வடிவுடன் வந்து பன்றியைக் கொன்று நிக்கிரகமும் அருச்சுனனுக்கு அனுக்கிரகமும் செய்து பாசுபதம் வழங்கி அருளினார். திசை பாலகர்கள் அவன்முன் தனித்தனியே வந்து தங்கள் தங்கள் அரிய படைக்கலங்களை வழங்கினார்கள்.

இதயகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

ஒளிமயமானதும், நவமணிகள் பதித்ததும் ஆயிரம் புரவிகள் பூட்டியதுமாகிய ஒரு பொற்றேர் அருச்சுனன் முன் வந்து இறங்கியது. அதில் இருந்தவனை விஜயன் விண்ணவர் வேந்தன் என்று எண்ணினான்.

மாதலி என்ற தேர்ப்பாகன் பார்த்தனைப் பணிந்து "இந்திர குமாரனே! உன்னைக்காண இந்திரன் விரும்புகிறான்; இத்தேரில் ஏறு" என்றான்.

தவம் செய்தவர்களே அதைக் காணவும் தீண்டவும் முடியும்.

தேர் புறப்படுகின்றபோது "ஏ இமாசலமே! உனக்கு வணக்கம்; உன் மடித்தலத்தில் ஐந்து மாதங்கள் கடும் தவம் செய்தேன். இது சித்தர்களும் புத்தர்களும் வாழும் புனிதமான இடம். புண்ணிய அருவிகளும் மகாநதிகளும் என்னால் பார்க்கப்பட்டன. சுனைகளில் ஆடினேன். சுவையுள்ள அமுதம்போன்ற அந் நீரைப் பருகினேன். உனக்கு என் வணக்கம்" என்று கூறி விடைபெற்றான்.

திருமுருக கிருபானந்தவாரியார்

அதியற்புதமான அத்தேர் அமராவதி நகரை அடைந்தது. அங்கு கந்தர்வ கானமும், அரம்பையரது ஆடலும் நிறைந்திருந்தன.

தந்தையாகிய இந்திரனைத் தனஞ்சயன் வணங்கினான். வானவர் கோமகன் மகனை மார்புறத் தழுவித் தனது புண்ணியமான இந்திராசனத்தில் இருத்தினான். அப்பொழுது அருச்சுனன் இரண்டாவது இந்திரனைப் போல் விளங்கினான்.

இந்திரன் அருச்சுனனுக்கு வஜ்ராயுதத்தையும், பலப்பல தெய்வப் படைக்கலங்களையும் தந்தான். இந்திரன் சொற்படி சித்திர சேனனிடம் நடனக் கலையையும் இசை நுணுக்கத்தையும் கற்றுக் கொண்டான்.

அருச்சுனன் இந்திரவுலகில் இனிமையாக வசிக்கின்றபோது அடிக்கடி தன் உடன் பிறந்தார்களையும், தாயாரையும் நினைத்து துயரம் அடைந்தான்.

இந்திரன் அருச்சுனனுக்கு முடி சூட்டினான். பட்டாபிஷேக விழா நடந்தது. அப்போது ஊர்வசி முதலிய தேவ மாதர்கள் நடனமாடி அர்ச்சுனனை மகிழ்வித்தார்கள். அருச்சுனன் ஊர்வசியைக் குறிப்பாகப் பல முறை பார்த்தான். அதனை இந்திரன் பார்த்தான்.

அன்றிரவு இந்திரன் 'சித்திர சேனனை அழைத்து "கந்தர்வனே! நடனம் ஆடும்போது ஊர்வசியைக் காண்டபதரன் கடைக் கண்ணால் பல முறை பார்த்தான். அவனுக்கு அவள் மீது விருப்பம் இருக்கக்கூடும். நீ சென்று ஊர்வசியிடம் என் அனுமதியைக் கூறி அருச்சுனனை மருவுமாறு செய்" என்றான்.

சித்திரசேனன் ஊர்வசியின் மணி மாளிகை சென்று "அம்மா! சமானமில்லாத வீரனும், தவத்தின் சிகரமானவனும், கட்டழகின் கருவூலமுமாகிய அருச்சுனனை இன்றிரவு நீ மருவி இன்புறுவாய்; இது இந்திரன் கட்டளை" என்றான்.

### ஆசை மாளிகை சுக்கு நூறாகியது

ஏற்கனவே அருச்சுனனுடைய அழகில் மயங்கிக் காமத் தீயால் வெதும்பிக் கொண்டிருந்த ஊர்வசி பெருமகிழ்ச்சி அடைந்தாள். தன்னை நன்கு அலங்கரித்துக்கொண்டாள். நடு இரவில் மரகதக்கொடி அசைவதுபோல், மெல்ல அசைந்து, பொற்றட்டில் கற்பக மலர் மாலையும், கற்பக்கனி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## எதிரொலி

● செம்மணி விவகாரம் சூடு பிடிக்கின்றது.
★ சூடு பட்ட இடம்; சூடு பிடிக்கத்தானே செய்யும்?

● காவிரி நீர்ப் பிரச்சினைக்கு ஒகஸ்ட் 12 இற்கு முன்னர் தீர்வு காணப்படும்.
★ தண்ணீரில் எழுதிய எழுத்தாக இது இருந்து விடக்கூடாது.

● கிழக்கிலே புதிய அரசியற் குழு ஒன்று உருவாகியுள்ளது.
★ புதிய அரசியற் குழப்பங்களும் உருவாகுமோ?

● ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்குமிடையே கருத்து வேறுபாடுகள் அதிகரித்து வருகின்றன.
★ உள் நாட்டுப் போரின் நேரடி விளைவுதான் இந்த உள் வீட்டுப் பூசலோ?

● இராமேஸ்வரத்துக்கு அண்மையிலே படகொன்று கவிழ்ந்து 46 இற்கு மேற்பட்ட ஈழத் தமிழ் அகதிகள் மரணம்.
★ இங்கே கண்ணீரிலே குளித்தவர்கள் அங்கே தண்ணீரில் மூழ்கியுள்ளனர். தமிழர்கள் என்றால் இப்படியாக வேண்டும் என்ற நியதியா?

● சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கை மகாநாயக்க தேரரிடம் கையளிக்கப்பட்டுவிட்டது.
★ என்னென்ன விஷ(ய)ங்கள் அதற்குள்ளே 'பொதி'யப்பட்டுள்ளனவோ?

● வீதிகளின் சீர்கேட்டால், யாழ்ப்பாணத்திலே பஸ் ஓட்டம் பாதிப்படையக்கூடும்.
★ ஓடத் தெரியாதவனும் வீதி சரியில்லை என்று சொல்வதுண்டு.

● தமிழ்க் கட்சிகள் சொன்னவற்றை இந்தியப் பிரதமர் கவனமாகக் கேட்டார்; ஆனால் பதிலேதும் சொல்ல வில்லை!
★ "ஜா"வின் அனுபவத்தை நினைத்து 'நா' காத்து விட்டாரோ?

● வெளிநாட்டு நிபுணர்களின் உதவியுடனேயே செம்மணிப் புதைகுழிகள் தோண்டப்பட வேண்டும் எனத் த. வி. கூட்டணித் தலைவர் வற்புறுத்து.
★ வர வர எல்லோரிடமும் வெளி நாட்டு மோகம் அதிகரித்து வருகின்றது!

— இடியன்

# இளமுருகன் பவனி காண்பதற்காக இடிபட்டு முந்தும் பக்தர் கூட்டம்

## நல்லூர் வீதியில் அருள் அனுபவம்

ஆறுமுகம் கொண்ட சீர் வேல் – வஞ்சகர்க்
கஞ்சு முகந் தந்து துஞ்சிக்கும் கூர்வேல்
ஏறு நடை கொண்ட போர் வேல் – தெய்வம்
இல்லை என்பாருள்ளும் துள்ளும் உயிர்வேல்

சொல்லில் வடிக்க முடியாத சுந்தர ரூபனான குமரக் கடவுள் எமது அல்லல் அகற்ற, வல்லவேல் தாங்கி நல்லையில் அமர்ந்திருந்து அருளாட்சி புரிகின்றான்.

கோல எழிற் பாலனாக அவன் காட்சி தருகின்ற



போதிலும் ஞாலம் உய்ய உதித்த மூலமூர்த்தி அவன். "சிவனே அவன் ஆடலால் மதலையாயினன் காண்" என்பதால் இதனை உணரலாம். பாலனாகவும், பல[illegible]னாகவும், அழகனாகவும், ஆண்டியாகவும், பண்டிதனாகவும், சற்குருவாகவும், போகியாகவும், யோகியாகவும், மயூரனாகவும், மலைவாசியாகவும் மாறுபட்ட வேடந்தாங்கி எமக்கு ஊறு ஏற்படும் போதெல்லாம் தேறுதலும், ஆறுதலும் தருபவன். அன்பர்க்கு மாத்திரமன்றி வன்பர்க்கும், துன்பம் தராது இன்பம்தருபவன். எனவே எல்லோரும் அவனை ஏத்துவர்.

நல்லையம்பதி நற்பதி. திருநல்லூர், மணிமாட நல்லூர், புனித நல்லூர், தெய்வீக நல்லூர், ஆட்சித் தலைநகர் நல்லூர், குமரகோட்ட நல்லூர், எழுச்சி விழாக் கண்ட நல்லூர், அபயமளித்த நல்லூர், கலைமலி நல்லூர், ஆதீன நல்லூர் எனப் பலவாறு அதனை அழைக்கலாம்.

சரித்திர நிகழ்வுகளையும், சமயவிழாக்களையும், கலைவிழாக்களையும், கவியரங்குகளையும் கண்ட பேரூர் அது. அழகன் முருகனது ஆலயத்தால் இன்று அகிலளாவிய பெருமை அடைந்துள்ளது. ஆடி மாதத்தில் அதனை நாடி, கோடிக்கணக்கான பக்தர்கள் வருவது அதன் ஈடிணையில்லாத பெருமையை உணர்த்துவதாகும்.

கந்தனின் அரசாங்கம் அங்கு கவினுற நடைபெறுகின்றது. கோயிலின் அயலில் கூடிய கூட்டம் தலையா, கடல் அலையாக எனப்பிரமிக்க வைக்கும். உண்மையில் அது நல்ல ஊரேயாம்.

வெற்றி வடிவேலன் தனது திருக்கரத்தில் வேலாயுதத்தைப் பற்றிப் பிடித்திருக்கின்றான். அது சுற்றி நிற்கும் பகை எல்லாவற்றையும் பற்றி விடச் செய்து நற்கதி அருளும் ஆற்றல் உடையது. முருகனுக்கு மாத்திரம் அணியாகவும் ஆயுதமாகவும் விளங்குகின்றது வேல். எனவே வேலன், வேலவன் எனப்பட்டான். அதிசயிக்கும் ஆற்றல்உடையது அது. அயில் வேலைக் கரம் தாங்கி ஒயிலான இரு மாதர் புடைசூழ மயில் மீது வரும்முருகனது

வாசுகி சிவராமலிங்கம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

காட்டுக்கந்தோர் ஒழுங்கையில் 2பரப்பில் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும்: திருமதி P. M. திருநாவுக்கரசு. 40/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(58021)

49/5 கோயில் வீதியில் 2 பரப்பில் சகல வசதிகளும் கொண்ட பெரிய வீடு விற்பனைக்குண்டு. ஆஸ்பத்திரி வீதியிலிருந்து 10 யார் தொலைவில், நேரில் தொடர்பு கொள்ளவும்: திருமதி P. M. திருநாவுக்கரசு 40/2 கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(58020)

சாவகச்சேரி கச்சாய் வீதி பேரம்பலம் ஒழுங்கையில் சகல வசதிகளையும் கொண்ட வீடு (நான்கு அறைகள், இரண்டு விறாந்தை, சமையலறை உட்பட) உடன் விற்பனைக்கு உண்டு. செல்வநாயகம் வனஜா, C/o நியூ செலக்சன் ரெக்ஸ், 13, நவீன சந்தை உட்புறமாக சாவகச்சேரி.

(57979)

### தவறிவிட்டது

ரவீந்திரன் வனஜா ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (635134399V) ஆனைக்கோட்டைக்கும் யாழ். ஆஸ்பத்திரிக்கும் இடையில் 27. 7. 98 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கணேசமூர்த்தி (ஆசிரியர்), நவாலிவீதி, ஆனைக்கோட்டை என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (58029)

சிவசுப்பிரமணியக் குருக்கள் கமல்ராஜ் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல. 752663963V) 28-07-98 அன்று அச்சுவேலிக்கும்யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வீரமாகாளி அம்மன் கோவில் தேவஸ்தானத்தில் ஒப்படைக்கவும்.

(58038)

### தேவை

மூதாட்டி ஒருவரை வல்வெட்டித்துறை வீட்டில் வைத்துப் பராமரிப்பதற்கு பெண் உதவியாளர் ஒருவர் தேவை. மாதாந்த ஊதியம், உணவு, உடை தகுதிக்கு ஏற்ப வழங்கப்படும். தொடர்பு: 36 (16) மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.

[58017]

மிருதங்கத் தொழில் செய்வதற்கு இளைஞர்கள் தேவை. மேலதிக விவரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கோ. விஜயகுமார். 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்.

[57972]

### இறைச்சிக்கோழி

நியாயவிலையில் புறோயிலர், கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. அரைக்கோழியும் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்துகொடுக்கப்படும். 54/2, சந்தனமாதா கோயில் முன் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம்.

(58030)

Broilers இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 40, கோயில் வீதி யாழ்ப்பாணம். (58037)

இறைச்சிக்கோழி (Broilers) கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 15, 6 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (சின்னக்கடைக்கு அண்மை

[57961]

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப்பயில ஆசிரியர் ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி 426, (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை (நிகரை வயிரவர்கோயில் முன்பாக).

(58034)

### O/L கணிதம் 98

ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், 33 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 20 அல்லது 40 நாள்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன், 10கச்சேரிகிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி.

(57925)

### விற்பனைக்கு உண்டு

நாகேஸ்வரி வித்தியாசாலை சுன்னாகம் கிழக்குப் பக்கமாகவும், கந்தோலிக்க பாடசாலைக்கு வடக்குப் பக்கமாகவும் 38 பரப்பு வயற்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: புலவரகம், மயிலணி, சுன்னாகம்.

[55466]

மொமேரியன் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: I. புஸ்பராசா, 44, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். [53018]

### கோழி மருந்து

ரணிக்கட், கம்புரோ கோழிகளுக்கான மருந்து 02 - 08 - 98 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் வழங்கப்படும். எம்மிடம் கோழிகள் எடுத்தோரும் மற்றும் தேவையானோரும் வந்து பெற்றுக்கொள்ளவும். 'மல்லிகாபதி' சந்தை முன் ஒழுங்கை, மானிப்பாய்

(57978)

கோப்பாய் பலானை

## கண்ணகை அம்மன் கோயில் திருமஞ்சத் திருவிழா

நாள்: 02-08-98 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 3.30 மணி
விசேட மேளம்: உதயசங்கர் குழுவினர்

அடியார்கள் யாவரும் அம்பாளின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

— 5 ஆம் திருவிழா உபயகாரர்

(58041)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
செல்வி கௌரி கனகசபை
அவர்களின் தந்தையாரான


**செல்லையா கனகசபை**

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்,
அளவெட்டி.

(58048)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி கந்தையா திலகவதி**

தோற்றம் 21 - 08 - 1945 மறைவு 03 - 07 - 1998

விரைந்தீர் சடுதியாக எமைவிட்டு, நம்பமுடியவில்லை! நாள்கள் அல்ல! மாதங்கள், வருடங்கள் பல சென்றிடினும் உம்மை நினைத்தே வாழ்ந்திடுவோம் எந்நாளும்!

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் தவிக்கும்:
கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மீசாலை மேற்கு,
மீசாலை. (58042)

## அதிக வேகத்..

(மூன்றாம் பக்கத் தொடர்)

களும் ஏந்தித் தனஞ்சயனுடைய தனி மாளிகையை அடைந்தாள்.

ஊர்வசியின் ஒப்பற்ற அழகைக்கண்டு கல்லும், புல்லும் கலைந்தன, ஆனால் தனஞ்சயனுடைய மனம் கரையவில்லை. அருச்சுனன் எழுந்தான் ''தாயே!'' என்று கூறி அவள் பாதத்தில் விழுந்தான். தன்னந்தனியான இடம். அவள் சின்னஞ்சிறு பெண்மணி. அவள் திடுக்கிட்டு நின்றாள். அவளுடைய ஆசையாகிய மாளிகை சுக்கல் சுக்கலாகச் சிதறியது.

''அருச்சுனனே! உன் ஈடில்லாத எழிலால் மயங்கிய யான் உன்னை மருவும் பொருட்டு வந்தேன். உன்னைச் சேய் என்றா நினைத்து வந்தேன்? இது தாயும் சேயும் சந்திக்கும் நேரமா? என் காதலைக் கடலில் கரைத்த காயமாகச் செய்து விட்டனையே?

உன்னை என் இதய நாயகனாக எண்ணி வந்தேன். நீ என் காலில் விழுவது நியாயமா? நான் குலமகளல்லள்; பொது மகள்.

உன் சபையில் ஆடும் நடனமாது. நீ அரசன் ஆதலால் என்னைத் தள்ளாதே உன் அன்புக்கு உரியவளாக ஏற்று என்னைத் தழுவாய்'' என்றாள்.

அருச்சுனன் ''அம்மா! என் மூதாதையாகிய புரூரவனை நீ மருவி ஆயு என்ற மகனைப் பெற்றனை. ஆதலால் நீஎன் குலத்துக்கே அன்னை. நான் சிவபக்தன். அஞ்செழுத்தை நெஞ்சில் அழுத்தினவன். நான் தவறு செய்யமாட்டேன். எனக்கு குந்திதேவியும், இந்திராணியும், நீயும் ஒன்றுதான். என்னை உன் மகனாக நினை'' என்றான்.

ஊர்வசி ''மாமன்னரே! நான் பொதுமகள். இங்கு புண்ணியம் செய்து வருபவர்கள் என்னை மருவுவார்கள். ஆதலால் காதல் வெந்து உன்னை அடைய வந்தேன். என்னைத் தாயென்று கருதுவது முறையன்று. விரும்பி வந்த என்னைத் துரும்பென வெறுக்காதே; என் காதலை மறுக்காதே. என் உள்ளம் உன்னைக் கண்டு உருகுகின்றது. நீ என் காதலன்'' என்றாள்.

''தாயே! மன்னிக்க வேண்டும். நான் தாயாக நினைத்த பின் உன்னைத் தொட மாட்டேன். தொட்டால் என் தர்மம் அழியும் சிவனடியவர்க்கு சீலந்தான் உயிர். திரும்பிச் செல்'' என்றான் உத்தம வீரன்.

### தந்தை வந்தார்

ஊர்வசி இதனைக் கேட்டுத் தீப்பொறிகள் சிந்த அவனை நோக்கி ''நீ பேடியாகக் கடவது'' என்று சபித்து விட்டுச் சென்றாள்.

அருச்சுனனுக்கு மீசை முதலிய ஆண் சின்னங்கள் மறைந்தன. மனக் கவலையோடு உறங்காது வருந்திக் கொண்டிருந்தான் மறுநாள் காலை இந்திரன் அங்கு வந்தான். ''அம்மா! நீ யார்? என் மகன் தனஞ்சயன் எங்கே?'' என்று கேட்டான். அர்ச்சுனன் இரவு நடந்தவை யாவும் கூறினான்.

இந்திரன் ''மகனே! வருந்தற்க. அவள் நடனம் செய்யும் போது அவளை நீ குறிப்பாகப் பார்த்தாய். அவள் மீது உனக்கு விருப்பம் உளது போலும் என்று கருதி நான் தான் உன்பால் அன்பால் அனுப்பினேன். நீ பொறி புலன்களை வென்ற வீரன். இவ் வீரத்தை எங்கும் காண்பது அரிது'' என்றான்.

''அப்பா! என் குலத்தை வளர்த்த கோமகள் என்று தான் நான் குறிப்பாகப் பார்த்தேன்.

'காதலால் பார்க்கவில்லை. நீர் என் பார்வையைப் பிழையாகப் புரிந்து கொண்டீர்' என்றான் விஜயன்.

இந்திரன் ''மகனே! இச்சாபம் விளைந்தது உன் நன்மைக்காகவே. இனி எதிர்காலத்தில் அஞ்ஞாதவாசத்தில் உன் திருமேனியை மறைத்து வாழ முடியாது. இச்சாபம் அஞ்ஞாத வாசத்துக்கு உதவும்'' என்று கூறிச் சாபத்தை மாற்றினான்.

சமயம், சந்தர்ப்பம் நேர்ந்த போதும் பொறி புலன்களை வென்றவனே சுத்த வீரனாவான். இதனை ஔவையார் பின்வருமாறு கூறுகின்றார்.

ஒன்றாகக் காண்பதுவே காட்சி;
புலன் ஐந்தும்
வென்றான்றன் வீரமே வீரம்.

(நன்றி: கல்கி தீபாவளி மலர்)

## மாபெரும் மாட்டுவண்டிச் சவாரி

ஸ்கந்தா ஐக்கிய விளையாட்டுக்கழக வளர்ச்சிக்காக
மேற்படி போட்டி நடத்தப்படுகிறது.

இடம்: கத்தரோடை சவாரி மைதானம்
காலம்: ஞாயிறு (02-08-98)
இன்று பி. ப. 1-00 மணி

சவாரிக் கட்டணம் 200/-
பிரவேசம் 10/ மட்டும்

(சி-4449)

## விரைவில் மின்சாரத்தை இரவு பகல் எதிர்பார்க்கும் இவ்வேளையில்?

★ ரி. வி. நிகழ்ச்சிகளைத் தெளிவாகப் பார்க்க அன்ரனாக்களைப் பொருத்திக்கொள்ளவும்,

★ பழுதடைந்த அன்ரனாக்கள், றேடியோக்கள், மணிக்கூடுகள், ரி. வி. டெக்குகளைத் திருத்திக் கொள்ளவும்,

★ கலர்ப்படச் சுருள்களை ஓரிரு நாள்களில் கழுவிப் பெற்றுக்கொள்ளவும்.
(கொழும்பு தராதரத்தை விட விசேடமாக)

**வீனஸ் டெல்கா**
284, ஸ்ரான்லி வீதி,
(நாகவிகாரை முன்பாக)
யாழ்ப்பாணம்.

கிளை:
பஸ் நிலையம்
(மீன்சந்தை அருகில்)
சாவகச்சேரி.

(சி/4446)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு ஒன்றின் உதவியுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்குக

## கரவெட்டி பிரதேச சபை தீர்மானம்

வடமராட்சி, ஓக. 2 வெளிநாடு ஒன்றின் உதவியுடன் சமாதானப் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்கவும் புலிகளும் அரசும் உடன் போரை நிறுத்தி தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளைத் தீர்க்கக் கூடியதாக வடக்கு- கிழக்கை சுயாட்சி அலகாக நிறுவவும் அரசும் எதிர்க்கட்சியும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோருகின்றோம்.

வடமராட்சி தெற்கு, மேற்கு (கரவெட்டி) பிரதேச சபைக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நெல்லியடி பொது நூல் நிலையமண்டபத்தில் சபைத் தலைவர் செல்லையா சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

★ செம்மணி புதைகுழி விவகாரம் தொடர்பாக அரசு தாமதமின்றி விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளை இனங்கண்டு சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்க வேண்டும். அத்துடன் இச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும்.

★ பாதுகாப்பு நடவடிக்கையின்போது மனித உரிமைகள் பேணப்பட வேண்டும். யாழ். மாவட்டத்தில் கைது செய்யப்படுவோர் யாழ்ப்பாணத்திலேயே தடுத்து வைக்கப்பட வேண்டும். அவர்கள் மீதான விசாரணையையும் துரிதப்படுத்த வேண்டும்.

★ சிறையில் இருப்போரை பெற்றோர்களும், உறவினர்களும் பார்வையிட அனுமதிக்க வேண்டும்.

இக்கூட்டத்தில் மொத்த உறுப்பினர்கள் 18 பேரில் 13 பேர் மாத்திரமே கலந்து கொண்டனர். புளொட்சார்பில் தெரிவானவர்களில் 4 உறுப்பினர்களும், ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் தெரிவான ஒரே ஒரு உறுப்பினரும் கலந்து கொள்ளவில்லை.

ஈ.பி.டி.பி. சார்பில் தெரிவான 9 உறுப்பினர்களும் புளொட் சார்பில் தெரிவான இரு உறுப்பினர்களும், ரெலோசார்பில் தெரிவான இரு உறுப்பினர்களும், கலந்து கொண்டனர். (ஐ-173-109)

## தீவுப் பகுதிகளில் சுய தொழிற் பயிற்சி

யாழ்ப்பாணம், ஓக. 2 இளைஞர் — யுவதிகளின் சுயதொழில் திறைமையை வளர்க்கும் நோக்கில் தீவுப் பகுதிகளில் சுய தொழிற் பயிற்சி முகாம்களை நடத்துவதற்கு மனித முன்னேற்ற நடு நிலையம் முயற்சிகளை எடுத்து வருகின்றது.

யாழ். குடாநாட்டில் இளைஞர், யுவதிகளுக்கு சுய தொழில் வேலை வாய்ப்புப் பயிற்சிகளைப் பல தனியார் நிறுவனங்களும், அரச நிறுவனங்களும் வழங்கி வருகின்றன. ஆனால் தீவுப் பகுதிகளில் இவ்வாறான பயிற்சி வகுப்புக்களை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனால் அங்குள்ள இளைஞர், யுவதிகள் சுய தொழிற் பயிற்சி பெற வாய்ப்பின்றி உள்ளனர். அவர்களின் இந்தக் குறையை நீக்கும் பொருட்டே சுய தொழிற் பயிற்சி முகாம்கள் அங்கு நடத்தப்படவுள்ளதாக மனித முன்னேற்ற நடு நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வானொலி, தொலைக்காட்சி போன்ற இலத்திரனியற் பொருள்கள் திருத்துதல், தட்டச்சுப் பயிற்சிகள், தையற் பயிற்சிகள் போன்றவை அங்கு வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-6-9)

## மண்டைதீவு விடிவு பெறுமா?

மண்டைதீவுக் கிராம மக்களின் சார்பிலும், மண்டைதீவு மேற்கு கிராம முன்னேற்றச் சங்கம் சார்பிலும் இத் திருமுகத்தை வரைகின்றோம்.

எமது கிராமம் கடந்த 8 வருட காலமாக இராணுவ நடவடிக்கைகளால் அழிந்து மயானம் போல் காட்சியளிக்கிறது. மரங்கள் தினசரி தறித்து அழிக்கப்படுகின்றன. எஞ்சிய வீடுகளும் சிறிது சிறிதாக அழிக்கப்பட்டு வருகின்றன.

இதற்கிடையில் அங்கு மீண்டும் குடியேறும்படி அரச அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால் மண்டைதீவில் தண்ணீர் வசதி, போக்குவரத்து வசதி, வைத்திய சாலை கடைகள் போன்றன இல்லாத நிலையில் அங்கு சென்று வாழ்வது எப்படி? இதனை மனிதநேயம் கொண்டவர்கள் எவரும் அங்கீகரிக்க மாட்டார்கள்.

1300-க்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்த இடத்தில் தற்போது 45 குடும்பங்கள் மட்டுமே மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் இங்கு வாழ்கிறார்கள். மீனவர்களது வருமானம் இங்கு வாழ்க்கை நடத்துவதற்கு ஓரளவு போதியதாக உள்ளது. ஆனால் விவசாயிகளைப் பொறுத்தவரை மழையின்மை போன்ற காரணங்களால் வருமானமில்லாமல் வருந்த வேண்டியுள்ளது.

இப் பிரதேசத்தில் வாழ்வதற்கான சூழ் நிலையை உருவாக்குவதற்கு அரசாங்கமோ, அதிகாரிகளோ எந்தவித முயற்சிகளும் எடுத்ததாகத் தெரியவில்லை. இங்கு வீடுகள், கிணறுகள், மலசல கூடங்கள், வீதிகள், குளங்கள், அணைக்கட்டுக்கள், மதகுகள் அனைத்தும் சிதைந்த நிலையில் உள்ளன.

இவையனைத்தும் திருத்தப்பட்டு மண்டைதீவுமீண்டும் புதுப் பொலிவு பெற்று விளங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

தலைவர்,
செயலாளர்.
மண்டைதீவு மேற்கு,
கிராம முன்னேற்றச் சங்கம்.

## நல்லதொரு முன்னுதாரணம்

அண்மையில் யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலய விஞ்ஞான மன்றத்தினர் யாழ். மாவட்ட பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. சாதாரணதர வகுப்புக்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும், அவ்வகுப்புக்களில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் ''இலத்திரனியல் பட்டறை'' ஒன்றை நடத்தியிருந்தனர். இப்பட்டறை மிகவும் பயனுள்ள வகையில் அமைந்திருந்தது.

உண்மையிலேயே இதனை ஒழுங்கு செய்திருந்த அப் பாடசாலையின் விஞ்ஞான மன்றத்தினரை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. அவர்களது இப்பட்டறை இன்னும் பல தொடர் திட்டங்களைக் கொண்டுள்ளது. இவர்களது இம் முயற்சி எம்மத்தியில் உள்ள பல்வேறு கல்விசார் நிறுவனங்களுக்கும், அமைப்புக்களுக்கும் நல்லதொரு முன்னுதாரணமாகும். குறிப்பாக எமது கல்வித்திணைக்களம், பல்கலைக்கழகம் போன்றன வெறுமனே ஒரு கட்டமைப்பிற்குள் இயங்கும் நிறுவனங்களாகவன்றி இது போன்ற நிகழ்வுகளை ஒழுங்கு செய்து மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் ஆளுமையை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

பெயரளவில் சங்கங்களையும், அமைப்புக்களையும் நிறுவுவதில் சமூகத்திற்கு எதுவித பயனும் ஏற்படப்போவதில்லை. இவ் விஞ்ஞான மன்றம் போன்ற துடிப்புள்ள சமூக நோக்குள்ள செயற்பாடு மிக்க அமைப்புக்களே எமது யாழ். கல்விச் சமூகத்தைமேம்படுத்தும் என்பதில் ஐயமில்லை. அந்த வகையில் எமது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலய விஞ்ஞான மன்றத்தினருக்கு வழங்குவதில் பெருமையடைகிறோம்.

வடமராட்சி ஆசிரியர்கள் சார்பில்,
தீ. சுபாகரன்
யா/கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலை,
வல்வெட்டித்துறை.

## தேர் தரிப்பிடம் அமைப்பு

வடமராட்சி, ஓக. 2 சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவிலில் 20இலட்சம் ரூபா செலவில் தேர் தரிப்பிடம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆரம்பமாகும் வருடாந்த மஹோற்சவத்துக்கு முன்னர் இக்கட்டடத்துக்கான வேலைகள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-173)

## தெய்வீக இசையரங்கு

யாழ்ப்பாணம், ஓக. 2 நல்லூர் உற்சவகாலத்தையொட்டி இளங்கலைஞர் மன்றத்தினர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் மாலை 5.30மணிமுதல் 7 மணிவரை ஒழுங்கு செய்துள்ள தெய்வீக இசையரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் திருமுறை ஓதலுடன் ஆரம்பமாகும்.

இன்றைய நிகழ்வில் வீ.கே. கானமூர்த்தி, எஸ். பாலமுருகனின் நாதஸ்வர இசையும் [illegible] பாஸ்கரனின் தவில் கச்சேரியும் இடம்பெறவுள்ளன. (ஐ-8)

### வலி மேற்கில்

## வளர்ப்பு நாய்களுக்கு அடுத்த வாரம் தடுப்பூசி

வலிகாமம் மேற்கு, ஓக. 2 வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போடவும் அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கும் பிரதேச செயலர் கா. சந்திரராசா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

தடுப்பூசி போடுதலும், அனுமதிப்பத்திரம் வழங்குவதும் பின்வரும் முறையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

சங்கானை கிழக்கு, சங்கானை மத்தி, சங்கானை மேற்கு, சங்கானை தெற்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த வளர்ப்பு நாய்களுக்கு எதிர்வரும் திங்கட்கிழமை சங்கானை பொதுச்சந்தையிலும் —

சங்கரத்தை, அராலி வடக்கு, வட்டுத் தெற்கு, வட்டு. தென் மேற்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த வளர்ப்பு நாய்களுக்கு எதிர்வரும் வியாழக்கிழமை வட்டுக்கோட்டை மிருகவைத்தியர் அலுவலகத்திலும் —

வட்டுக்கிழக்கு, வட்டு வடக்கு, வட்டு மேற்கு, ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த வளர்ப்பு நாய்களுக்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை வட்டு சிவன் கோயிலடி உபதபாற்கந்தோரடியிலும் — தொல்புரம் கிழக்கு, தொல்புரம் மேற்கு, பொன்னாலை, மூளாய் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த வளர்ப்பு நாய்களுக்கு எதிர் வரும் சனிக்கிழமை தொல்புரம் கமநல சேவை நிலையத்திலும் —

அராலி மேற்கு, அராலி மத்தி, அராலி தெற்கு, அராலி கிழக்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த வளர்ப்பு நாய்களுக்கு எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அராலி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திலும்—

சுளிபுரம் மேற்கு, சுளிபுரம் மத்தி ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த வளர்ப்பு நாய்களுக்கு 10 ஆம் திகதி திங்கட்கிழமை சுளிபுரம் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திலும்—

சுளிபுரம் கிழக்கு, பண்ணாகம், பனிப்புலம், சித்தன்கேணி ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த வளர்ப்பு நாய்களுக்கு எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்திலும் —

தடுப்பூசியும் அனுமதிப் பத்திரமும் வழங்கப்படும்.

தவறாமல் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியை போடுவதுடன் அனுமதிப்பத்திரத்தையும் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஐ- 175)


## கண்ணீர் அஞ்சலி

எமது இல்ல ஊழியர்
கா. ஸ்ரீஸ்கந்தராசா
அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் ச. காத்தி**

அவர்களின் மறைவை ஒட்டி துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கைதடி அரச முதியோர் இல்ல
ஊழியர் நலன்புரிச் சங்கம்

(58033)



## 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
11 — 07 — 1919



மறைவு
23 — 06 — 1998

**Dr. K. அருளம்பலம் (R. M. P.)**

Dr. K. அருளம்பலம் 23 – 06 – 98 அன்று மகிமைக்குள் பிரவேசித்த செய்தி கேட்டு விரைந்து வந்து பற்பல உதவிகள் செய்து ஆறுதற் படுத்தியோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், 25 – 06 – 98 இல் நடந்த நல் அடக்க ஆராதனையில் பங்கு பற்றியோருக்கும்.

26 – 07 – 98 இல் வீட்டில் நடந்த நன்றியறிதல் வழிபாட்டிலும், மதியபோசனத்திலும் கலந்து கொண்டு பல வழிகளிலும் உதவி செய்தோருக்கும், எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி L. K. அருளம்பலம்
பிள்ளைகள், மருமக்கள்.

''ரெட்ணாபதி''
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

(58012)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சலுசல முகவர் தேவை

Salu Sala சலுசல

விசேடமாக சுன்னாகம், மல்லாகம் பகுதிகளைச் சேர்ந்த தனியார்களிடமிருந்து சலுசல முகவர்களுக்கான விண்ணப்பப் படிவங்கள் கோரப்படுகின்றது. ஒப்பந்த படிவத்தையும், விண்ணப்பப் படிவத்தையும் எமது நிறுவனத்தில் வந்து பெற்றுக்கொள்ளும் போது பின்வரும் கட்டணங்களும் செலுத்தப்படல் வேண்டும்.

★ பதிவுக் கட்டணமாக ரூபா 1000
★ சலுசல முகவர் பெயர்ப்பலகைக்காக ரூபா 2750

உங்களுக்காக உடனுக்குடன்


★ புதிய புடைவை வகைகள் கொழும்பில் இருந்து தருவிக்கப்படும்.
★ யாழ். சலுசல விற்பனை விலையிலிருந்து 12½% வியாபாரக்கழிவு வழங்கப்படும்.

குறிப்பு: விண்ணப்பங்கள் வரையறுக்கப்பட்டிருப்பதால் விரைவில் பதிவுசெய்து விண்ணப்பங்களை உறுதி செய்யவும்.

லங்கா சலுசல லிமிட்டெட்,
யாழ்ப்பாணம்.

(58025)


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 19 — 10 — 1931
மறைவு 06 — 08 — 1995

**அமரர் ஆறுமுகம் கல்யாணசுந்தரேசன்**
B. A. Dip. in Ed. in Drama
(ஓய்வு பெற்றபிரதி அதிபர்
யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலபாடசாலை)
திதி: 02 — 08 — 1998

அல்லல் தீர்க்கும் நல்லை வேலவன்
தித்திக்கும் உற்சவ காலமதை
உலகை நீக்கும் இனிய வேளை எனக்
கொண்ட விந்தை தான் என்னவோ?

அன்புடன் நினைவு கூரும்,
மனைவி.

மருதனார் மடம், சுன்னாகம். (55468)

## 29ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணுலகில் 10 — 07 — 1945
விண்ணுலகில் 05 — 07 — 1998

சுழிபுரம் பத்திரகாளி கோவிலடியைச் சேர்ந்த
**சின்னத்தம்பி கந்தசாமி**

என் அன்புத் தெய்வமே! எம் காவற தெய்வமே!
கண்ணீர்க்கடலில் மூழ்கவிட்டுச் சென்றதேன்?
என் வேதனையை யாரிடத்தில் சொல்லியழுவேன்
அப்பா! பாசவலையில் பின்னிப் பாசத்தை
ஊட்டி விட்டு எப்படி எங்களைப் பிரிந்துசென்றீர்கள்?
காலனிடமிருந்து உங்களைக் காப்பாற்ற
முடியாத பாவிகளாகி விட்டோம்
நாங்கள் உங்களை எப்பிறப்பில் காண்போம்.

மனைவி, பிள்ளைகள்:
சஷீலா, கமலகாந்தன், சித்திரா.

192, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (58003)

## ஆசிரியர் சங்க கிளை திறப்பு

யாழ்ப்பாணம், ஓக. 2

நீண்ட நாள்களாக இயங்காதிருந்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கிளை புனரமைக்கப்பட்டு கடந்த புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சங்கத்தின் சிரேஷ்ட துணைப்பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆசிரிய மாணவர்களின் விசேட லீவு, கஷ்ட நிவாரணப்படி, புதிய பிரிவுகள் ஆரம்பித்தல் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன. புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

(ஐ-3-ரீ)

## பயிற்சிப் பட்டறை

வலிகாமம் கிழக்கு தென் பகுதி எல்லைக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறையொன்று எதிர்வரும் 7 ஆம், 8 ஆம், 10 ஆம், 11 ஆம், 12 ஆம் திகதிகளில் காலை முதல் மாலைவரை உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையை அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் உரும்பிராய் ஞானவைரவர் கோயிலடி பொதுப் பணி மன்றங்களின் இணையம் ஒழுங்கு செய்துள்ளது.

(ஐ-8)

## பிரதேச சபை முதலாவது கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஓக. 2

ஊர்காவற்றுறை, வேலணை பிரதேச சபைகளின் முதலாவது கூடடம் எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கூட்டம் அதன் தலைவர் ந. மதனராஜன் தலைமையில் அன்று காலை 9 மணிக்கும் வேலணை பிரதேச சபைக்கூட்டம் அதன் தலைவர் என். கருணாகரமூர்த்தி தலைமையில் அன்று பி.ப 2 மணியளவில் நடைபெறவுள்ளன.

(ஐ-5-6)


பின்வரும்
புதிய வகுப்புகள்
ஆரம்பமாகின்றன

1) ஆண்டு 11 இற்கு ஆங்கில இலக்கிய வினாவிடை வகுப்பு
2) 9ஆம், 10 ஆம் ஆண்டிற்கு ஆங்கில இலக்கியமும், ஆங்கிலமும்.

ஆரம்பம்:
02 - 08 - 98 3-15p.m.

ஆசிரியர்: தெய்வர்

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(58019)



## விற்பனைக்கு

கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்ட கடைப் பாவனைக்குரிய டீ பிறீசர் (குளிர்சாதனப் பெட்டி) விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**விஜிதா கபே**
247, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(57955)


இந்திய - பாக். பிரச்சினை:

# இலங்கை ஒருபோதும் மத்தியஸ்தம் வகிக்காது

## ஜனாதிபதி தெரிவிப்பு

இந்திய — பாகிஸ்தான் நாடுகளுக்கிடையிலான நெருக்கடியில் இலங்கை ஒரு போதும் மத்தியஸ்தம் வகிக்காது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற 10 ஆவது சார்க் மகாநாட்டின் இறுதி நாள் கூட்டத்தில் உரையாற்றிய போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த இரு நாடுகளும் தமக்கு இடையிலான நெருக்கடி குறித்துப் பேசித்தீர்க்க வேண்டிய காலம் வந்து விட்டது.

இவ்விருநாடுகளின் தலைவர்கள் கொழும்பில் முதன் முதலாகச் சந்தித்துக் கொண்டது இவ்விரு நாடுகளுக்கிடையிலான நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என எதிர்பார்க்கின்றேன்— என்று தெரிவித்தார்.

(ஐ - 7)

## நன்றி கூறுகின்றேன்

சி. யோகலிங்கம் ஆகிய
எனது தேசிய அடையாள அட்டை மற்றும் ஆவணங்களை கண்டு எடுத்து எனக்கு அனுப்ப உதவிய
**பங்குத்தந்தை கோப்பாய்**
அவர்களுக்கு
எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சி. யோகலிங்கம்
நெல்லியடி மெ. மி. த. க.
பாடசாலை ஆசிரியர்
கரவெட்டி.

[58022]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அரியாலையூர் சின்னக்கிணற்றடி
**பொன்னம்பலம் செல்வரத்தினம்**

மண்ணில் 21-11-1918
விண்ணில் 03-07-1998

உலகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்திரே நீரே!
கலங்கரை விளக்காய்க் குலம்காத்தீர் நீரே!
நலமுடனே நாம் வாழ வைத்தீர் நீரே!
குலக்கொழுந்தே நீவிர் எமைவிட்டுச்
சென்றதெங்கோ!

தத்தையே! எங்களைப் பிரிந்து நீர்சென்றாலும் உம் நினைவுகள் எம் இதயங்களை விட்டு என்றும் அகலாது.

குடும்பத்தினர்.

சின்னக் கிணற்றடி ஒழுங்கை,
அரியாலை. (58035)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இந்தியாவின் பங்களிப்பு

இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்றைக் காண்பதற்கு இந்தியாவின் பங்களிப்புத் தேவை என்று கொழும்பு வந்திருந்த இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாயிடம் நேரில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, அகில இலங்கை இந்து மாமன்றம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரஸ் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்தியப் பிரதமரைத் தனித்தனியாகச் சந்தித்துப் பேசினர்.

வடக்கு — கிழக்கில் தொடரும் போரினால் தமிழ் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள், அவலங்கள் குறித்து இந்தியப் பிரதமருக்கு விவரிக்கப்பட்டது. தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியமும், அவசரமும் அவருக்கு எடுத்துரைக்கப்பட்டது. போரை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு இந்தியா உதவ வேண்டும் என்றும் கோரிக்கை விடப்பட்டது.

அனேகமாக எல்லாத் தரப்புகளுமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியாவின் பங்களிப்புத் தேவை என்பதனை ஊன்றி வலியுறுத்தின.

இன்றுள்ள சூழ்நிலையில் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேச்சு வார்த்தை நடத்தினாலேயே இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு ஒன்றைக் காணக்கூடிய சாத்தியம் உண்டாகும். மேற்கூறிய இரு தரப்புகளும் தாமாகவே நேரில் பேசும் வாய்ப்பு முற்றாக அற்றுப்போய் விட்டது. இருபக்கங்களும் பரஸ்பரம் ஒன்றின் மீது மற்றது நம்பிக்கை இழந்துவிட்டது. அதனால் மூன்றாம் தரப்பு ஒன்றின் பிரசன்னம் அல்லது மத்தியஸ்தம் இல்லாமல் அரசு — விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு எவ்வகையான சாத்தியமும் இல்லை.

இலங்கை அரசும் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் குறித்து வேளைக்கு வேளை தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டிருக்கிறது.

ஆகையால் பேச்சுவார்த்தையின் அவசியத்தைவலியுறுத்தி இலங்கை அரசை அந்தவழி நாடுமாறு தூண்டும் சக்தியும், பங்களிக்கும் திறமையும் இந்தியாவிடமே உண்டு என்று பலரும் கருதுகிறார்கள்.

எனினும் இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்தியா ஏற்கனவே பங்களித்துத் தனது விரலைச் சுட்டுக் கொண்டதாலும், தனது தலைவர் ஒருவரை இழந்து விட்டதாலும் இது விவகாரத்தில் திர ஆலோசித்தே முடிவு செய்ய விரும்பும் என்பது இயல்பானது.

அயல் நாடு ஒன்றில், போரின் மூலம் இன அழிவு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, இந்தியா அதனைக்கண்டுகொள்ளாதிருக்க, கண்ணை மூடிக் கொண்டிருக்க முயல்வது அதற்கு மதிப்பல்ல; தார்மீகமும் அல்ல.

# பூலோகத்திலேயே பரலோகமுண்டு;
# அதனை அடைவதற்கும் வழியுண்டு

நம்மில் பலரும் பரலோகம் என்பது எமக்கு எட்டாக்கனி என்றும், தெரிந்து கொள்ளப்பட்டவர்களுள் சிலர்தான் பரலோகத்தைக் காணமுடியும்என்றும் சிந்தை கொண்டுள்ளோம்.

பரலோகம் என்பது பூலோகத்திலேயே இயேசுவால் ஸ்தாபிக்கப்பட்டு விட்டது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இயேசுவால் ஸ்தாபிக்கப்பட்டு விட்ட அந்தப் பரலோக வாழ்வை நாம் தொடர்ந்து பேணக் கடவுளால் அழைக்கப்படுகிறோம்.

ஒருவர் வீதி விளக்கொன்றுக்குக் கீழே நின்று எதையோ தேடிக் கொண்டிருந்தார். அவ்வழியே வந்த இன்னொருவர், 'என்ன தேடுகிறீர்' என அவரிடம் வினாவினார். அவர் 'என் திறப்பு ஒன்றைத் தொலைத்து விட்டேன். அதைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன்' என்று விடையளித்தார். உடனே மற்றவர், 'நீர் எந்த இடத்தில் அதைத் தொலைத்தீர்' என்றார். 'அதை என் வீட்டு வாசலில் தொலைத்து விட்டேன்' என்று அவர்கூற, அப்போ ஏன் இங்கு தேடுகிறீர்?' என்று இவர் கேட்டார்.

'அங்கு இருள்: இங்கு வெளிச்சம்; வெளிச்சமுள்ள

**ஞாயிறு நற்பிரசாதம்**

இடத்தில் தான் அதைத் தேட வேண்டும்' என்று விடை வந்தது.

நாமும் இவ்வாறு தான். தேட வேண்டிய இடத்தை விட்டுவிட்டு எவற்றையெல்லாமோ எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம். வெளிச்சமுள்ள இடத்தில் பொருளைத் தேடாமல், பொருளைத் தொலைத்த இடத்தில் ஓர் ஒளியை ஏற்றிவிட்டு பொருளைத் தேடுவது உத்தமமல்லவா? அதுபோல 'நாம் எங்கு தவறிப்போனோம்?' என்று யோசித்துப் பார்த்து, அந்த இடத்தில் இருந்து ஒளியை ஏற்றி புது வாழ்வைத் தொடங்குவோம்.

''நீ மனவுறுதி கொண்டுள்வாய்; என் பெயரின் பொருட்டு எத்தனையோ துன்பங்களை நீ தாங்கிக் கொண்டுள்வாய்; ஆயினும் சோர்வு அடையவில்லை என்று எனக்குத் தெரியும். ஆனால் உன்னிடம் நான் காணும் குறையாதெனில், முதலில் உன்னிடம் விளங்கிய அன்பு இப்போது இல்லை. ஆகையால் நீ எந்நிலையிலிருந்து தவறி விழுந்துவிட்டாய் என்பதை நினைத்துப்பார். மனம் மாறு; முதலில் நீ செய்து வந்த நன்மைகளை இப்போதும் செய். நீ மனம்மாறத் தவறினால், நான் உன்னிடம் வந்து உனது விளக்குத் தண்டை அது இருக்கும் இடத்திலிருந்து அகற்றி விடுவேன்'' என்று ஆண்டவர் கூறுவதாக யோவான் தரிசனம் காண்கிறான்.

[திருவெளிப்பாடு 2:3–5]

எனவே, எமது ஒளி தொலைந்து இருள்மேவிய தருணத்தை நினைவு கூர்வோம். அவ்விருளைப் தொலைக்க ஒளி ஏற்றித் புதுவாழ்வைத் தொடங்குவோம். பரலோகம் என்பதை நாம் எதிர்காலக் கனவாகக் கருதாது நிகழ்காலத்தில், இப்போதே, இங்கேயே, இந்தப்பூவுலகிலேயே பரலோக வாழ்வைத் தொடங்குவோம். அதை விடுத்து பூலோகத்தில் நரக வாழ்வு வாழ்ந்து விட்டு நாம் எதிர்கால பரலோக வாசிகள் என்று கூறுவதில் எவ்வித அர்த்தமும் இல்லை.

சிந்திப்போம்! செயற்படுவோம்!

**சகோ. பி. தேவதாஸ்**

## அச்சுவேலிப் பகுதியில் 4 மதகுகள் புனரமைப்பு

அச்சுவேலிப் பகுதியில் பிரதான வீதிகளில் உள்ள நான்கு மதகுகள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை— யாழ்ப்பாணம் நேர் வீதியில் இரு மதகுகளும்—

அச்சுவேலி பருத்தித்துறை வீதியில் ஒரு மதகும்—

அச்சுவேலி, யாழ்ப்பாணம் வீதியில் ஒரு மதகும்—

புனரமைப்புச் செய்யப்பட்டுவருகின்றன.

இம்மாத பிற்பகுதியில் இப்புனரமைப்புப் பணிகள் முடிவடைந்து இம் மதகுகள் ஊடாக போக்குவரத்துக்கள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மதகுகள் திருத்தப்படுவதால் மதகுகளுக்கு அருகில் போக்கு வரத்துக்கென தற்காலிக பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஐ-173–11)

## அதிபர்கள் கூட்டம்

குருநகர், ஒக. 2

யாழ்ப்பாணம், நல்லூர் கல்விக்கோட்டங்களுக்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான பாடசாலைத் தொகை மதிப்பீடு பற்றிய அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும்வெள்ளிக்கிழமை மு.ப. 9-00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்.

பட்டோலை நிரப்புவதில் அனுபவம் வாய்ந்த ஓர் ஆசிரியருடன் 01–07–98 இல் உள்ளவாறு பாடசாலையில் உள்ள ஆசிரியர்கள் தொகை பற்றிய புள்ளி விவரங்களுடன் கூட்டத்தில் பங்குபற்றுமாறு கோட்டக்கல்வி அதிகாரி பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார்.

(ஐ-51)

## கிராம அலுவலர் சங்கக்கூட்டம்

வலிகாமம் மேற்கு, ஒக 2

யாழ். மாவட்டத்தில் இயங்கிவந்த இரண்டு கிராம உத்தியோகத்தர் சங்கங்களையும் ஒன்றிணைக்கும் பொதுக்கூட்டம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறவுள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் கிராம உத்தியோகத்தர் சங்கங்களின் ஒருங்கிணைப்புக்குழுவினர் மேற்கொண்டுள்ளனர். (ஐ-175)

## கூடிடுவோம் நல்லூரில்!

செந்தமிழால் சிவன் மகனை
சிரந் தாழ்த்திப் பணிந்திட்டால்
சந்ததமும் அருள் புரிவான்
சக்தி சிவன் மைந்தனவன்
சிந்தை தனைக் குளிர்விக்கத்
தெய்வ யானையுடன் வருமக்
கந்தனை நாம் காண்பதற்கு
கூடிடுவோம் நல்லூரில்.

— ப.க.மகாதேவா

## யுவதியை பாம்பு தீண்டியது

அடுப்பு மூட்டுவதற்காக விறகு எடுக்கச் சென்ற இளம் பெண் பாம்பினால் கடியுண்ட சம்பவம் கடந்த வியாழனன்று காலை கொடிகாமம் ஸ்ரேசன் வீதியில் இடம்பெற்றது.

ஆபத்தானநிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவர் அன்புலன்ஸ்மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்குகொண்டு செல்லப்பட்டார்.

இதே இடத்தைச் சேர்ந்த செல்வராசா சுகந்தினி (வயது 19) என்பவரே பாம்பினால் கடியுண்டவராவார்.

(ஐ-117)

## கப்பலில் பொருள் அனுப்புவோருக்கு

யாழ்ப்பாணம், ஒக. 2

தற்பொழுது பருத்தித்துறையில் பொருள்களை இறக்கிக்கொண்டிருக்கும் ''ஹண்டி'' கப்பலில் இங்கிருந்து விவசாய உற்பத்திப் பொருள்கள் மற்றும் பொருள்களை அனுப்புவதற்கு யாழ். செயலக புனர்வாழ்வுப்பகுதியில் விண்ணப்பித்தவர்கள் நாளை திங்கட்கிழமை காலை புனர்வாழ்வுப் பகுதியுடன் தொடர்பு கொள்ளுமாறு திட்டப் பணிப்பாளர் சீ. மகாலிங்கம் கேட்டுள்ளார்.

(ஐ-8)

## அராலி பாலம் புனரமைப்பு

'முன்னேறிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்த அராலிப்பாலம் தற்போது திருத்தப்பட்டு வருகிறது.

மழை காலத்திற்கு முன்பாக திருத்தப்பட்டால் வாகனங்கள் தங்கு தடையின்றி பயணம் மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-185)

## தலைமைத்துவப் பயிற்சி நெறி

தென்மராட்சி, ஒக. 2

வடக்கு-கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் பளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராமிய அபிவிருத்தி சங்கங்கள் ஆகியவற்றின் பிரதி நிதிகளுக்கான தலைமைத்துவ தலைமைப் பயிற்சி நெறிகள் கடந்த வியாழனன்று பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கூட்டுறவு மண்டபத்தில் பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி தலைமையில் ஆரம்பமானது.

இன்று நடைபெறும் இறுதி நாள் பயிற்சி நெறிகள் முடிவில் யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு பயிலுநர்களுக்கான சான்றிதழ்களை வழங்குவார்.

(ஐ-117)

## தற்காலிக பாதை அமைப்பு

வலி. தென்மேற்கு, ஒக. 2

வழுக்கையாறு பாலம் திருத்துவதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கையாக அதற்கு அருகே தற்காலிக பாதை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதேவேளை நவாலி— வழுக்கையாறு வீதி பெருப்பிக்கப்பட்டு திருத்தப்பட்டு வருகிறது.

(ஐ-185)

**உதய வாக்கு**

வாழ்க்கை அனுபவம் இல்லாத எவரும் கல்வி கற்றவராக முடியாது.

- பெர்னாட்ஷா



## வீர மாமயில் ஏறும் வேலவன்!

வீர மாமயில் ஏறும் வேலவா —விளங்கு
கௌரி பாலகா வா
எனக்கும் உனக்கும் பேதமேனோ
எடுத்துச் சொன்னால் போதம் போமோ
மணக்கும் சோலை நல்லூர் வாசா
வணங்கும் யோக சுவாமி நேசா.

— யோகர் சுவாமிகள்

## நாளை

ஆடி -18
திங்கட்கிழமை
திதி: தசமி
முற்பகல் 8.46 வரை
நட்சத்திரம்: அனுஷம்
முற்பகல் 9.11 வரை
சுபநேரம்: 12.04 - 1.34
ராகுகாலம்: 07.34-09.04
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீனத்துவத்தில் நல்லனவற்றை மட்டுமே ஏற்று வாழப் பழகுக!

## எப்படியும் வாழலாம் என்றிருக்கலாகாது

அன்பு மகளே,

உன்னுடைய நீண்ட மடலைப் படித்து பெருமூச்சு விட்டேன். உன்னுடைய பல கருத்துக்களை நான் ஏற்காது விட்டாலும் சகித்துக் கொள்ளவாவது முடிந்தது.

ஆனால் நீ உடை விசயமாக எழுதிய கருத்துக்கள் என் உள்ளத்தில் சொல்லொணாத வேதனையை ஏற்படுத்தியது. மகளே, பல ஆண்டுகளாக எமது யாழ்ப்பாணத்துத் தமிழப் பிள்ளைகளின் உடை அலங்காரம் போகிற போக்கைப் பார்த்து வெதும்பிய பல நூற்றுக்கணக்கான தாய்மார்களில் நானும் ஒருத்தி. படிப்பு முடியட்டும், நாட்டுப் பிரச்சினையோடு உன் மனதைக் குழப்ப வேண்டாம் என்று இருந்தேன், இப்பொழுது எனது கருத்துக்களைச் சொல்லச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

சேலை கட்ட நேரமில்லை, ஆதிகாலத்தில் சேலையா கட்டினார்கள்? பஞ்சாபியும் பண்பான உடைதானே? நவீன உடைகள் சைக்கிளோட்டத்திற்கு வசதி. என்றெல்லாம் அளந்தாய், நான் மறுக்கவில்லை மகளே, எப்படியும் வாழலாம் என்ற நிலையும் உண்டு. இப்படித்தான் வாழவேண்டும் என்ற நெறி முறையும் உண்டு. எப்படி வாழ்வதால் எமக்கும் சமூகத்திற்கும், எதிர்காலச்சந்ததிக்கும் நன்மை பயக்கும் என்பதைத் தீர்மானிப்பது உன் பொறுப்பு.

> அம்மாவுக்கும் மகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் மடல் மோதலில் தாயின் தரப்பில் எழுதப்பட்ட பதில்கடிதங்களில் இதுவும் ஒன்று.
> இதனை எழுதியவர் பாடசாலைஅதிபரான
> திருமதி சி. விஸ்வலிங்கம்

அண்மையில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை உன் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றேன். இரண்டு மாதங்களுக்கு முன்பு பட்டதாரி ஆசிரியர்களுக்கான நேர்முகத் தேர்வினை கல்வி அதிகாரிகள் நடத்தினார்கள் அல்லவா? எதிர்காலத்தில் ஆசிரிய உலகினை அலங்கரிக்கப்போகும் பட்டதாரிப் பெண்மணி ஜீன்ஸுடன் சட்டையுடன் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றினார். இது பற்றி விசாரித்தபோது அனுமதி அட்டையில் இன்ன, இன்ன சான்றிதழ்களைத் தானே கொண்டு வரும்படி கூறப்பட்டுள்ளது என்றாராம், சட்டையும் அணிந்து வரும்படி நாங்கள் கேட்கவில்லையே என்று நல்ல வேளையாக அந்த அதிகாரி சொல்லவில்லை.

''செந்தமிழ் நாட்டுத் தமிழிச்சியே ஏன் சேலை கட்டத் தயங்குகிறாய், நீச்சலுடையோடு அலைகிறாயே'' என்று ஆதங்கப்படும் தமிழ் சினிமாப் பாடலின் வரிகளைச் சிந்தித்துப் பார்.

மனிதன் வேட்டுவ நிலையிலிருந்த காலத்தில் யாரும் ஆடை அணிய வில்லை என்பது உண்மைதான். பழங்கால மக்களின் வாழ்க்கையைப் பிரதி பலிக்கும் ஓவியங்களிலும், சிற்பங்களிலும் மகளிர் மேலாடை அணியாமல் சேலை அணிந்திருப்பதும் உண்மைதான்.

அன்றைய வாழ்க்கை முறையும், இன்றைய வாழ்க்கை முறையும் ஒரே தன்மையானதாகவா காணப்படுகின்றது? அன்றைய காலப் பெண்களின் வாழ்க்கை முறை குறுகிய வட்டத்திற்குள் சுழன்றது. பெண்கள் வீட்டை விட்டு அதிகம் வெளியேவரவில்லை. கட்டுக் கோப்பான குடும்ப அமைப்பில் மிகவும் அடக்க ஒடுக்கமாகக் காவல், கட்டுப்பாடுகளுடன் வளர்க்கப்பட்டார்கள்.

ஆனால் இன்று பெண்களின் நிலை அவ்வாறா காணப்படுகின்றது? ஜனாதிபதி பதவி போன்ற அதி உயர் பதவி தொடக்கம் சகல துறைகளிலும் பெண்கள் சிறந்து விளங்குகிறார்கள். சமர்க்களத்தில் போராடுவது மட்டுமன்றி விமானங்கள் ஓட்டுவது. விண்வெளியில் வலம் வருவது போன்ற செயற்பாடுகளிலும் இறங்கியுள்ளனர். ''ஆண்களுக்குப் பெண் 'இளப்பமில்லை'' என்பது போல ஆண்களுக்குச் சமனாக சகல வேலை வாய்ப்புக்களிலும் பெண்கள் ஈடுபடுவதால் உடை விடயங்களில் பெண்கள் கவனமாக இருக்க வேண்டும்.

பைலட் ஆகப் பணிபுரியும் பெண்ணும்; யுத்தகளத்தில் பணிபுரியும் பெண்ணும் தொழிலுக்குரிய உடைகளை அணிவதை நான் தவறென்று கூறவில்லை. பல்கலைக் கழக மாணவிகள் சில தொழில் தாபனங்களில் பணிபுரியும் பெண்கள் சேலை அணியத் தயங்குகிறார்கள். எமக்கென்றொரு பாரம்பரிய உடை, அழகான அடக்கமான உடை இருக்கிறது. அதனை நாம் அணிவதனால் பெருமைப் படவேண்டுமேயொழிய வெட்கப்படக் கூடாது.

போக்கு வரத்து வசதிகள் தடைப்பட்ட நிலையில் தொழில் நிலையங்களுக்குச் செல்ல வேண்டிய நிலையிலுள்ள நாற்பது வயதுக்கு மேற்பட்ட பெண்கள் சேலையுடன் சைக்கிள் ஓடுகிறார்கள், இளம் வயது உடையவர்களான நீங்கள் மட்டும் வசதியான உடை பாவாடையும்; பஞ்சாபியும் என்கிறீர்களே, எமது பண்பாட்டின் பெருமையைக் காப்பதற்காக சிறு கஷ்டத்தைத் தாங்கினால் என்ன குறை வந்து விடும்?

மகளே, ஒரு பெண் அடக்கமான உடையுடன் வீதி வழியே செல்லும் போது காமுகனுக்கும் கையெடுத்துக் கும்பிடத்தான் தோன்றும். பெண் என்றால் மகாலட்சுமி மாதிரி, சரஸ்வதி மாதிரி இருக்கவேண்டும் என்று எனது தாயார் உனது அம்மம்மா அடிக்கடி சொல்லுவார்.

முன்னர் குறிப்பிட்ட வயதுக்கு மேற்பட்ட பெண்கள் சேலை அணிந்தார்கள். (பாடசாலை மாணவிகள் உட்பட) இன்று நிறைமாதக் கர்ப்பிணிகள் தொடக்கம் நாற்பது வயதுக்குமேற்பட்ட அம்மா, அம்மம்மாமார் கூட வைத்தியசாலைகள், கடைகள், வங்கிகள் என்று எல்லா இடங்களிலும் 'நைற்றி' எனப்படும் இரவு ஆடையுடன் அலைகிறார்கள். அறைக்குள் அணியும் ஆடையுடன் தெருவெல்லாம் அலையும் கன்றாவிக் காட்சிகள் இன்று யாழ். நகர வீதிகளில் சர்வசாதாரணம்.

மகளே, நீ பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு அறையில் தங்கி ஆங்கிலம் படிக்கிறாய் ஏனென்றால் தொழிற்சந்தையில் உன் தகுதியை விலை பேசுவதற்காக.

இன்றைய கல்வி அன்பையும் ஒழுக்கத்தையும், பண்பாட்டையும் வளர்ப்பதற்குப் பதிலாக அகங்காரத்தையும் இயந்திரத் தனத்தையும் வளர்த்து விட்டிருக்கி

**மடல் மோதல்**

றது. கற்றல் என்பது நடத்தை மாற்றம். நல்ல கல்வி மிருக இயல்புடையவனையும் நல்ல மனிதனாக உருவாக்கும்.

கல்வி அழகே அழகு என்று நாலடியார் கூறுகிறது. கல்வி மேலே ஏற ஏற ஒழுக்கமும், எளிமையும் அடக்கமும் எல்லாரிடமும் ஏற்பட வழிவகுக்க வேண்டும். அதுவே கல்வியின் நிறைவான பயனாக இருக்கவேண்டும். அதனை விடுத்து வேலை பெறுவதற்கு ஒரு கடதாசி மட்டை (சான்றிதழ்) பெற வேண்டும் என்ற நோக்கோடு உன் கல்வி அமையுமானால், அதனால் நீ நினைக்கும் நிமிர்வு உனக்கு ஏற்படுமானால் அக்கல்வியால் அது பெற்றுத் தரும் தொழிலால் உனக்கும் பிறருக்கும் எந்த விதமான பயனும் இல்லை.

நான் பெற்று வளர்த்த மகள் நீ. நீ தவறமாட்டாய் என்பதில் எனக்குத் திடமான நம்பிக்கை உண்டு. நவீனத்துவம் அவசியம். அவற்றுள் நல்லனவற்றை ஏற்று அல்லனவற்றை அகற்றி வாழத் தெரிந்திருத்தல் வேண்டும். பாடப் புத்தகங்களை மட்டும் திருப்பித் திருப்பிக் கற்ற அரைவேக்காட்டுக் கல்வி உன்னைக் குழப்பி விட்டிருக்கிறது. பரீட்சை மையக் கல்வி மட்டும் ஒரு மனிதனை முழு மனிதனாக்காது. நல்ல அறிஞர்களின் நல்ல நூல்களை ஓய்வு நேரங்களில் எடுத்துப் படித்துப்பார்; அறிவுத்தெளிவு ஏற்படும். நீ புத்திசாலி அல்லவா?

அன்புடன்

உனது அம்மா,

# தென்னாசிய நடனங்கள் குறித்து புதிய தகவல்களைத் தரும் நூல்

பிரபஞ்சத்தையே இயக்கிக்கொண்டு திருநடனம் புரியும் நடராஜப் பெருமானை முதற்தெய்வமெனப்போற்றி நிற்கும் நடனக்கலையின் ஆதாரபூர்வமான சான்றுகளை ஆழமாகவும், அகலமாகவும், வரலாற்று ரீதியில் நோக்கி ஆராய்ந்து எழுதப்பட்ட ''தென்னாசிய சாஸ்திரிய நடனங்கள் ஒரு வரலாற்று நோக்கு என்ற நூல் மிகவும் பயன்பாடு உள்ளதாகும்.

இது 12 கட்டுரைகளை உள்ளடக்கி, 140 பக்கங்களைக் கொண்டமைந்துள்ளது. அதாவது தென்னாசியாவிலே நிலவுகின்ற முக்கியமான சாஸ்திரிய நடனங்கள், நடன நாடகங்கள் ஆகியவற்றின் பொது அம்சங்கள் பற்றிய கட்டுரையுடன் தொடங்கி பரதம், கதக்களி, மோவறினி ஆட்டம், குச்சுப்புடி, பாகவத மேளம், யக்ஷகானம், ஒடிஸி, செள, கதக், மணிப்புரி, கண்டிய நடனம் எனக் கட்டுரைகள் வரைந்துள்ளன.

ஒவ்வொரு கட்டுரையும் விரிவாகவும், விளக்கமாகவும் அமைந்து நடனம் கற்கும் மாணவர்களுக்கும், நடனம் பற்றி அறிய விரும்புவோருக்கும் உதவும் வகையில் காணப்படுவது குறிப்பிடத் தக்கது.

தற்காலத்தில் பாடசாலைக் கலைத்திட்டத்தில் உள்ளடக்கிய பாடத்திட்டங்களையும், நடனக்கலைமானி, நடனக்கலை மணி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி வட இலங்கை சங்கீத சபை போன்றவற்றுக்கான பாடத்திட்டங்களையும் உள்ளடக்கி அனைத்து மாணவருக்கும், ஏனைய நடனப் பிரியர்களுக்கும் அதிகம் உதவும் பாங்கில் இது அமைந்துள்ளமை சிறப்பானது.

இதுவரை தமிழில் வெளிவந்த நடன நூல்கள் பரதம் பற்றியே பெரிதும் கூறியுள்ளன. ஆனால் இந்நூல் பரதம் மட்டுமன்றி ஏனைய தென்னாசிய சாஸ்திரீய நடனங்களைப் பற்றி அதிகமான உசாத்துணை நூல்களை உள்ளடக்கிய உயர்தரக் கட்டுரைகளை உள்ளடக்கியுள்ளமை மிகவும் பயன்பாடுள்ளதாகும். தென்னாசிய சாஸ்திரீய நடனங்கள் பற்றித் தமிழிலே விரிவாக எழுதப்பட்ட முதலாவது நூல் இதுவாகும். இவ்வகையில் இது ஒரு புதிய முயற்சியாகும். ஒவ்வொரு கட்டுரையும் குறிப்பிட்ட சாஸ்திரீயநடன வடிவத்தின் வரலாறு, பிரதான அம்சங்கள், நிகழ்ச்சிநிரல், கலைஞர் முதலியனவற்றை உள்ளடக்கி விளக்குகின்றது.

ஆசிரியர் சமஸ்கிருதம், வரலாறு என்பனவற்றில் தேர்ச்சி பெற்றவராயினும், இயல்பாகவே கலைப் பிணைப்பில் ஒன்றியமையால் அவரது விருப்பமான கலை. ஆராய்ச்சிகள் நூல் வடிவமாகி கலை ஆர்வலரின் அறிவுப்பசிக்கு விருந்தாகின்றன.

ஆசிரியர் தனது வரலாற்று ரீதியான அறிவைப் பயன்படுத்தி அனைவரும் எளிதில் விளங்கும் வகையில் நடன வகைகளின் படங்களையும் முன் அட்டையிலும், முடிவிலும் இடம் பெறச்செய்து தென்னாசியாவில் நிலவுகின்ற நடனங்கள், அவ்வவற்றிற்குரிய படங்களுடன் அவ்வப்பிரதேசங்களில் எடுத்துக் காட்டியுள்ளார். இது பாராட்டத்தக்கதொரு சிறப்பம்சமாகும்.

ஆதாரபூர்வமாகவும், யதார்த்தமாகவும் உள்ளதை உள்ளவாறு கூறும் பாங்கு இந் நூலாசிரியரின் இயல்பான தன்மை எனலாம். நீண்டகால முயற்சி இடையில் தடங்கல் ஏற்

(9 ஆம் பக்கம் பார்க்க)

> நூல்: தென்னாசிய சாஸ்திரீய நடனங்கள் = ஒரு வரலாற்று நோக்கு
> ஆசிரியர்: பேராசிரியர் வி. சிவசாமி

## திருமதி சாந்தினி சிவநேசன்

# இளமுருகன் பவனி...

(மூன்றாம் பக்கத் தொடர்)

கோல எழில் காணக் கண்கள் இரண்டும் போதாது என்பது உண்மையேயாம்.

இடர் தீர்க்கும்அயில்வேல், இன்பம் தரும் நல்வேல். பழமையான ஆயுதமெனினும் அது புதுமை புரியும் நவவேல். நல்லூர் மூலஸ்தானத்தில் அது ஒளிர்கின்றது. அதுவே எமது வினை தீர்க்கும்.

இருபத்தைந்து தினங்கள் நடைபெறும் திருவிழாவில் முருகனின் அருட்பெருக்கு அதிகமாக இருக்கும். அழகன் முருகனின் அலங்கார உலா அகத்தினைக் கொள்ளை கொள்ளும் திருவுருவ திருவுலாக் காண்பதற்கு திடசங்கற்பம் பூண்டு திரளும் திருவடியார் எண்ணிக்கை திணற வைக்கும்.

சிறுவரும், சிறுமியரும், ஆண்களும், பெண்களும், காளையரும், கன்னியரும் முருகனின் அருட்காட்சி கண்டின்புற திரளுவர் [illegible] டும், நெறிபட்டும் [illegible] வது பவனியை பார்த்துவிட வேண்டுமென்று முந்துவர். இது அருள்அனுபவம்; எல்லாவற்றையும் கந்தன் ஏற்றுக் கொள்வான். எல்லாருக்கும் இயைந்த கடவுளாக அவன் இருப்பதே இதற்கு காரணம். அவன் கலியுக வரதன்; கண் கண்ட தெய்வம்.

நல்லூரான் திருவடியை நாம் நினைத்த மாத்திரத்தில் சொல்ல வொண்ணாத சுகம் எமக்கு ஏற்படுவதை உணரலாம். அநுபூதிமான்கள் கண்ட உண்மை இது. சிந்தனையை கந்தன் பால் [illegible] செய்து அந்தமில் இன்பம் அடைவோமாக.

★

## மக்கள் முகம்




சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் வி. சிவசுப்பிரமணியத்தின் புதல்வனான வி. சி. சிவரத்தினம் அகில இலங்கை சமாதான நீதிவானாகப் பதவிப் பிரமாணம் செய்துள்ளார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவராகிய இவர் யாழ். விலைமதிப்புத் திணைக்கள உத்தியோகத்தராக கடமை புரிந்து வருகின்றார்.

இவர் கந்தரோடை ஸ்ரீ சுப்பிரமணிய வாசிகசாலை, சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலையம், இலங்கை செஞ்சிலுவைச் சங்க உடுவில்கிளை, லயன்ஸ் கழகம் ஆகியவற்றின் உறுப்பினராகவும் விளங்குகின்றார்.

இவர் தொழில் நுட்பக் கல்லூரியில் டிப்ளோமா பயிற்சி பெறும் காலத்தில் அங்கு தமிழ் மன்றத் தலைவராக இருந்து ''தமிழருவி'' என்ற நூலை வெளியிட்டதுடன் கலைவிழா, சுற்றுலா போன்றவற்றையும் நடத்தினார்.

இவர் சிறந்த சமூக சேவையாளன் ஆவார்.



ஈவினையைச் சேர்ந்த முன்னாள் அதிபர் செ. செல்வரத்தினம்யாழ் மாவட்ட சமாதான நீதிவானாக நியமனம் பெற்றுள்ளார்.

சிறந்த சமய, சமூகசேவையாளராகிய இவர் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் பழையமாணவராவார்.

இவர் தற்பொழுது ஈவினை அ. த. க. பாடசாலை அபிவிருத்திச் சங்கம், வயாவிளான் மத்திய மகாவித்தியாலய பழையமாணவர் சங்கம், ஈவினை கிராம அபிவிருத்திச்சங்கம் ஆகியவற்றின் செயலாளராகவும், ஈவினை கற்பகவிநாயகர் ஐக்கிய நாணய சங்கம், சுன்னாகம் ப. நோ. கூ. சங்க ஈவினைக்கிளை 19 ஆகியவற்றின் தலைவராகவும், ஈவினை கற்பக விநாயகர் சனசமூக நிலைய ஆலோசகராகவும், சுன்னாகம் ப. நோ. கூ. சங்க இயக்குனர் சபை உறுப்பினராகவும் சேவையாற்றி வருகின்றார்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலமைச்சர் பதவியிலிருந்து கருணாநிதி விலக வேண்டும்!

## ஜெயலலிதா கோரிக்கை

சென்னை, ஒக. 2

''ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மு. கருணாநிதி மீது பாரபட்சமற்ற விசாரணை நடைபெற வேண்டும் என்றால், முதலமைச்சர் பதவியில் இருந்து உடனடியாக அவர் விலக வேண்டும்.''

அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா மேற்கண்டவாறு கோரி உள்ளார்.

ஜெயின் ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள கடுமையான கருத்துக்கள் மற்றும் இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள சந்தேகங்களின் அடிப்படையில் சி.பி.ஐ. யின் உத்தேசப் பல் துறைக் குழு முதலமைச்சர் கருணாநிதி மீது விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும்—

அவர் மீது முதல் தகவல் அறிக்கையை உடனடியாக பதிவு செய்ய வேண்டும் என்றும்—ஜெயலலிதா கேட்டுள்ளார்.

சி.பி.ஐ. யின் உத்தேசக் குழு கருணாநிதியை விசாரிக்க வேண்டும் என முடிவு எடுத்த பின்னர் அவர் முதலமைச்சராக இருப்பது தார்மீக அடிப்படையில் முறையல்ல என்றும் ஜெயலலிதா மேலும் கூறினார்.

அதே சமயம் ஜெயினின் இறுதி அறிக்கை மற்றும் அரசின் நடவடிக்கை அறிக்கை குறித்து ஜெயலலிதா நேற்று மாலை தமது கூட்டணிக் கட்சித் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி, பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ், ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி, அ. தி. மு. க. அவைத் தலைவர் இரா. நெடுஞ்செழியன், சேடப்பட்டி முத்தையா ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சுப்பிரமணிய சுவாமி கருணாநிதி பதவி விலகவேண்டும்என்று தாமும் கருதுவதாகக் கூறினார்.

ஜெயினின் இறுதி அறிக்கையையும், நடவடிக்கை அறிக்கையையும் படித்த பின்னரே தாம் கருத்துக் கூற முடியும் என வை. கோபாலசாமி கூறினார். (இ-9)

## ஜெயலலிதாவின் நிர்ப்பந்தத்துக்கு பாரதீய ஜனதா அரசு பணிந்துவிட்டது

### தி. மு. க. பொதுக்குழு கண்டனம்

சென்னை, ஒக. 2

திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் மு. கருணாநிதி மேலும் விசாரிக்கப்படவேண்டும் என ஜெயின் ஆணைக்குழு தனது இறுதி அறிக்கையில் தெரிவிக்கவில்லை. அப்படியிருந்தும் இதுபற்றி விசாரிக்கச் செல்வி ஜெயலலிதாவின் நிர்ப்பந்தம் காரணமாக மத்திய அரசு குழுவொன்றை நியமித்திருப்பது கண்டிக்கத்தக்கது என தி. மு. க. பொதுக்குழு நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றியது.

மத்தியில் பாரதீய ஜனதா தலைமையிலான அரசின் சார்பில் முதலில் தயாரிக்கப்பட்ட நடவடிக்கை அறிக்கையில், தி.மு.க. தலைவர் மு. கருணாநிதியைப்பற்றி எந்த விதமான குறிப்பும் இல்லை எனவும் —

தற்போது தமிழகத்தில் இருந்து மத்திய அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள ஒரு சில அமைச்சர்களின் தூண்டுதலின் பேரில் இது போன்ற குறிப்பு நாடாளுமன்றத்தில் வேண்டுமென்றே சேர்க்கப்பட்டிருப்பதாகவும் — டில்லியில் இருந்து வெளிவரும் ஏடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதனையும் இந்தப் பொதுக்குழு மக்களின் கவனத்துக்கு முன்வைப்பதாக தி.மு.கவின் பொதுக்குழுவின் தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## மாவோ கிளர்ச்சியாளர்கள் நேபாளத்தில் சரண்

காட்மண்டு ஒக. 2

நேபாளத்தில் மாவோவின் கொள்கைகளைப் பின்பற்றும் கிளர்ச்சிக்காரர்களில் மேலும் 100 பேர் சரணடைந்துள்ளனர்.

வன்முறையைக் கைவிடுவோருக்கு பொதுமன்னிப்பு வழங்க நேபாள அரசு இரண்டு வாரங்களுக்கு முன்பு முன்வந்ததிலிருந்து 0 பேர் ஆயுதங்களைக் கைவிட்டுள்ளார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவோவின் கொள்கையைப் பின்பற்றும் இந்தக் கிளர்ச்சிக்காரர்கள் நேபாளத்தில் முடியாட்சியை கவிழ்த்து கம்யூனிஸ் ஆட்சி ஒன்றை ஏற்படுத்துவதற்கு 1996 இலிருந்து போரிட்டு வருகிறார்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு 14 — 04 — 1916

உதிர்வு 04 — 07 — 1998

**அமரர் மயில்வாகனம் வைத்திலிங்கம்**

அன்புத் தெய்வமே! பாசமிகு தந்தையே!
பண்பின் உறைவிடமே நாமிருக்க எங்குசென்றிர்?
ஆதரிக்க ஆயிரம் உறவுண்டு ஆனாலும்
அப்பா என்று நாம் யாரை அழைப்போம்?
திங்கள் ஒன்று சென்றதையா ஆனால்
எம் கவலை நீங்கவில்லை!
ஆண்டு பல சென்றாலும் ஆறுமோ எமதுதுயர்!

அன்னாரின் மரணச் சடங்குகளில் கலந்து கொண்டும்; அனுதாபச் செய்திகளை அனுப்பியும்; எமது துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு, நாளை (03-08-98) காலை எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியையிலும் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

என்றும் அவரது அன்பு வலையில்
சிக்கித் தவிக்கும்

அன்பு மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

திகிரி ஒழுங்கை, தும்பளை,
பருத்தித்துறை.

## சைக்கிள் இலக்கத் தகடு

சாவகச்சேரி, ஒக. 2

1998 ஆம் ஆண்டுக்குரிய சைக்கிள் இலக்கத் தகடுகளை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் மு. செ. சரவணபவ தெரிவித்துள்ளார். (இ-31)

## தென்னாசிய...

(எட்டாம் பக்கத் தொடர்)

பட்ட போதிலும் இறுதியில் நிறைவேறி நூல் வடிவமாகி வெளிவந்தமை வாசகர்களுக்கு, குறிப்பாக நடனப் பிரியர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் எனலாம்.

பரதக் கலை வரலாற்றினைப் பழையகாலந்தொட்டு இக் காலம்வரை வரன்முறைப்படி பல்வேறு வரலாற்றுச் சான்றுகளுடன் தக்கவாறு ஆசிரியர் எடுத்துக் கூறியுள்ளார். இக் கட்டுரை வரலாற்று ரீதியில் வளர்ந்து செல்லும் பாங்கு நன்றாக அமைந்துள்ளது. இதிலே புதிய தகவல்கள் பலவும் இடம் பெற்றுள்ளன. இது போலவே ஏனைய நடனங்கள் பற்றிய கட்டுரைகளும் பெரிதும் அமைந்துள்ளன.

ஆசிரியரின் கலைப்பங்களிப்பு முன்பு எத்தனையோ கட்டுரைகள், நூல்களாக வெளிவந்ததிலிருந்தும், இந் நூலுக்குச் சென்னை சங்கீத வித்வாத்சபைச் செயலாளர் வழங்கியுள்ள சிறப்பான வாழ்த்துச் செய்தியில் இருந்தும் அறியக் கூடியதாக உள்ளது.

ஆசிரியரின் இடைவிடாத செயற்பாடு, ஊக்கம், அயராத உழைப்பு நடனக்கலை மீதுள்ள இயல்பான ஈடுபாடு முதலியனவற்றின் விளைவே இந்நூல் எனலாம். அரிய பெரும் கருத்துக்களை உள்ளடக்கிய இந்நூலின் பெறுமதி அதன் விலைக்கு அப்பாற்பட்டது என்றே கூறலாம். ஆசிரியரின் கலைப் [illegible] குறிப்பிடத் தக்கது. ★

## சாவகச்சேரிப் பகுதியில் நாய்களுக்கு தடுப்பூசி

தென்மராட்சி, ஒக. 2

வளர்ப்பு நாய்களுக்கு ஏற்றப்படும் விசர்நோய்த் தடுப்பூசி மருந்து சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு வந்துள்ளது.

தடுப்பூசி பின்வரும் திகதிகளில் பின்வரும் இடங்களில் வளர்ப்பு நாய்களுக்கு ஏற்றப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது:-

எதிர்வரும் 10 ஆம் திகதி கொடிகாமம் பொது சுகாதாரப் பரிசோதகர்பிரிவைச் சேர்ந்த மந்துவில் பகுதி சனசமூக நிலையங்களில் —

11 ஆம் திகதி சாவகச்சேரி பொது சுகாதார பரிசோதகர் பிரிவைச்சேர்ந்த மீசாலை மதுவன் சனசமூக நிலையத்தில் —

18 ஆம் திகதி சாவகச்சேரி உதயசூரியன் சனசமூக நிலையத்தில் —

24 ஆம் திகதி சரசாலை பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவைச் சேர்ந்த சரசாலை கிராமசபை அலுவலகத்தில் —

25ஆம் திகதி பளை பொது சுகாதார பரிசோதகர் பிரிவைச் சேர்ந்த புலோப்பளை சனசமூக நிலையத்தில் — (இ-117)

## தாக்குதலில் இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஒக. 2

இரவுநேரம் நித்திரையில் வைத்து அடித்துத் தாக்கியதில் இருவர் படுகாயமடைந்தனர்.

சாவகச்சேரி சங்கத்தானையில் நேற்று முன்தினம் இரவு 12 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் சங்கத்தானையைச் சேர்ந்த விஸ்வலிங்கம் சுந்தரமூர்த்தி (வயது 37), அவரது உறவினரான கொடிகாமத்தைச் சேர்ந்த சிவலிங்கம் சிவசங்கர் (வயது 21) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளனர். (இ-15)

## நுண்கலை மாணவருக்கு

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண் கலைத் துறையைச் சேர்ந்த சகல மாணவர்களுக்கான பொதுக் கூட்டம் நாளை திங்கள் காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வலைப் பந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக. 2

யாழ். பல்கலைக்கழக அவை ராஜா கிறீம் ஹவுஸின் அனுசரணையுடன் யாழ். மாவட்டத்தில் உள்ளவலைப் பந்தாட்ட கழகங்களுக்கிடையில் நடத்தும் வலைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் நாளையும், நாளை மறுதினமும் இடம்பெறவுள்ள போட்டிகளின் விவரம் வருமாறு;-

நாளை திங்கள் பிற்பகல் 3. 30 மணிக்கு ஆத்திசூடி மலைமகள் விளையாட்டுக் கழகம் எதிர் இராமநாதன் கல்லூரி —

பிற்பகல் 4. 30 மணிக்கு வளர்பிறை விளையாட்டுக் கழகம் எதிர் மல்லாகம் விளையாட்டுக்கழக ''பி'' அணி.

நாளை மறுதினம் செவ்வாய் பிற்பகல் 3.30 மணிக்கு சீக்கோ அன்ட் டிஸ்கோ விளையாட்டுக்கழகம் எதிர் யாழ். பல்கலைக்கழக விளையாட்டுக் கழகம்.

பிற்பகல் 4. 30 மணிக்கு மல்லாகம் விளையாட்டுக் கழக ''ஏ'' அணி எதிர்சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலய அணி.

போட்டிகள் யாவும் யாழ். பல்கலைக்கழக வலைப் பந்தாட்ட விளையாட்டுத் திடலில் நடைபெறும். (இ-7)

## மீளாய்வு அறிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 2

யாழ். குடாநாட்டின் மீள் குடியேற்ற புனர்வாழ்வு திட்டம் மீளாய்வு என்ற தலைப்பிலான பல பக்கங்களைக் கொண்ட அறிக்கை ஒன்றை யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் தயாரித்துள்ளது.

1996 மே தொடக்கம் 1998 ஜூன் வரை யாழ். குடாவில் அரசும், அரச சார்பற்ற நிறுவனங்களும் மேற்கொள்ளும் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்தும் அரச திணைக்களங்களின் நிலை குறித்தும் இந்த அறிக்கையில் விவரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தின்உண்மை நிலையை படம் பிடித்துக் காட்டும் இந்த அறிக்கையின் பிரதிகள் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும், மனித நேய அமைப்புக்களுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளன. (இ-5)

## பிரான்ஸில் புலோலிவாசி வீதி விபத்தில் பலி!

யாழ்ப்பாணம், ஒக. 2

பிரான்ஸில் கடந்த வாரம் இடம்பெற்ற வீதி விபத்தில் புலோலியைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார்.

புலோலி தெற்கைச் சேர்ந்த பொ. ஸ்ரீபத்மநாதன் (வயது44) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். (இ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நயினாதீவு தெற்கு கிராம அலுவலர் பிரிவில் கடற்கரையோரத்தில் கடந்த செவ்வாயன்று நான்கு பெண்களின் உருக்குலைந்த சடலங்கள் கரையொதுங்கின. அவற்றில் இரு சடலங்களை மேலே உள்ள படத்தில் காணலாம். மன்னாரில் இருந்து தமிழகம் நோக்கிச் சென்ற படகு ஒன்று இராமேஸ்வரம் கடற்பகுதியில் கவிழ்ந்து கடலில் மூழ்கிய சம்பவத்தில் பலியானோரின் சடலங்களே இவை என நம்பப்படுகிறது. (படம்: பிட்டு) (இ)

# மன்னார் - திருமலை பஸ் சேவை
# நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஓக. 2

மன்னார் — திருகோணமலை பஸ் சேவை நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் போக்குவரத்துச் சபையின் சாலை முகாமையாளர் வி. ராஜரட்ணம் இந்த பஸ் சேவையை நேற்று ஆரம்பித்து வைத்தார்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் எஸ். சொக்கலிங்கத்தின் பணிப்பின்பேரில் இந்த பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மன்னார் போக்குவரத்துச் சபை நடத்தும் இந்த பஸ் சேவை ஒன்றுவிட்ட ஒருநாள் நடைபெற உள்ளது. இந்தப் பயணத்தின்போது பயணி ஒருவரிடம் இருந்து 52 ரூபா பயணக் கட்டணமாக அறவிடப்படும். (இ-9)

## ம. எண்ணெய்..

(முதலாம் பக்கத் தொடர்)

பரல் மண்எண்ணெயுடன் இந்த லொறி சென்று கொண்டிருந்ததெனவும்

முழங்காவில் ஏற்றம் அருகே சென்றதும் லொறி திடீரெனத் தீப்பற்றி எரிந்ததாகவும், உடனே மண்எண்ணெய் பரல்கள் பெரும் சத்தத்துடன் வெடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் முழங்காவில் ஏற்றப் பகுதியில் கரும்புகை மண்டலம் காணப்பட்டதாகவும்—

தீயை அணைப்பதற்கு அப்பகுதி மக்கள் பலத்த முயற்சிகளை மேற்கொண்டதாகவும் எனினும் அந்த முயற்சி பலனளிக்காது போய்விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இத் தீ விபத்தால் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை எனவும் லொறிச் சாரதி தெய்வாதீனமாக உயிர்தப்பி விட்டார் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# ஒலுமடு, குஞ்சுக்குளம் பகுதிகளில் மோதல்!

வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஒலுமடு வடக்கிலும், குஞ்சுக்குளத்துக்கு வடமேற்குப்பகுதிகளிலும் நேற்று முன்தினம் மாலை கடும் மோதல்கள் இடம்பெற்றதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் நேற்றிரவு அறிவித்தது.

இம்மோதல் சம்பவங்களில் விடுதலைப் புலிகள் தரப்பில் சிலர் உயிரிழந்திருக்கலாம் என மேலும் தெரிவிக்கப்பட்டது.

# பத்திரிகையாளர்கள் நகரை சுற்றிப்பார்த்தனர்

யாழ்ப்பாணம், ஓக. 2

நேற்று யாழ்ப்பாணம் வந்த வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் நகரின் பல பகுதிகளையும் சுற்றிப்பார்த்தனர்.

பஸ் நிலையப் பகுதிக்குச் சென்ற இவர்கள் அங்கு நின்ற மக்களுடன் உரையாடினார்கள். பஸ் போக்குவரத்தையும் பார்வையிட்டனர்.

யாழ். பல்கலைக் கழகம், போதனா வைத்தியசாலை, ஆயர் இல்லம், மாநகரசபை ஆகியவற்றுக்கும் பல திணைக்களங்களுக்கும் அவர்கள் விஜயம் செய்தனர்.

அங்கு அதிகாரிகளைச் சந்தித்து யாழ். நிலைவரத்தையும் கேட்டறிந்து கொண்டனர். (இ-5)

## வெளிவாரி பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஓக. 2

பேராதனைப் பல்கலைக் கழக 97 ஆம் ஆண்டு ஜி. ஏ. கியூ. வெளிவாரி மாணவர்களின் பரீட்சை முடிவுகள் வெளிவந்துள்ளன.

இப்பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களும் தமது பெறுபேறுகளை, யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தி புதிய உயர் கல்லூரியில் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 320 மாணவர்களின் பரீட்சை முடிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. மாணவர்கள் தமது சுட்டிலக்கத்துடன் வந்து பார்வையிடும்படி கேட்கப்படுகிறார்கள். (இ-15)

## தவணை விடுமுறை

யாழ். உயர்தர தொழில் நுட்ப நிறுவனம் கடந்த 31 ஆம் திகதி 2 ஆம் தவணைக்காக மூடப்பட்டு எதிர்வரும் 24 ஆம் திகதி மூன்றாம் தவணைக்காகத் திறக்கப்படும்.

## ஒரு நிமிட...

(முதலாம் பக்கத் தொடர்)

தைப் போன்று ஒரு நிமிட அழைப்புக்களையும் ஏற்படுத்துவதற்கு அனுமதிவழங்குமாறு பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமையவே நேற்றுமுதல் ஒருநிமிட அழைப்பினை ஏற்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (இ-9-7)

## அல்வாயில்...

(முதலாம் பக்கத் தொடர்)

கைதானோர் விவரம் வருமாறு.

★ வீரபத்திரன் நகுலேஸ்வரி (வயது 40)

★ வீரபத்திரன் சுகிர்தா (வயது 20)

★ வீரபத்திரன் றஜித்தா (வயது 14)

இவர்களில் சுகிர்தா, றஜித்தா ஆகிய இருவரும் பருத்தித்துறையில் உள்ள கல்லூரி ஒன்றன் மாணவிகள் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# கிரிக்கெட் சங்கம் விசேட கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 2

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் விசேட பொதுச் சபைக் கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 3.30மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் கழகங்கள் தலா இரண்டு பிரதிநிதிகளை அனுப்பிவைக்குமாறு யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் ப. இராஜீவன் அறிவித்துள்ளார். (இ-9)

## கிரிக்கெட் போட்டி

யாழ். மாவட்ட இலங்கை வங்கி ஊழியர் அணிக்கும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியருக்குமிடையிலான கிரிக்கட் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

## சமய நிகழ்ச்சிகளில்

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் கோயில் பூரணை உற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (ஐ-173)

★ ★ ★

தென்புலோலி உபயகதிர்காமம் கோயில் வருடாந்த உற்சவத்தின் தேர்த்திருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமையும் தீர்த்தோற்சவம் சனிக்கிழமையும் நடைபெறவுள்ளன. (ஐ-173)

★ ★ ★

வரலாற்றுச் சிறப்பு மிக்க சரவணை சின்னமடு மாதா கோயில் திருவிழா நேற்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 4 ஆம் திகதி பிற்பகல் 5 மணிக்கு நற்கருணை விழாவும், மறுநாள் காலை 9 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் இடம்பெறும் (ஐ-ரி)

## கப்பலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

இடையிலான பயணிகள் கப்பல் சேவை குறித்து உத்தியோகபூர்வ அறிவித்தல்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை எனவும் —

பயணிகள் கப்பல் சேவையில் பயன்படுத்தப்படவென வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள கொரிய நாட்டுக் கப்பல் இன்று கொரியாவில் இருந்து இலங்கை நோக்கிப் புறப்படுமென எதிர்பார்த்த போதும் நேற்றிரவு வரை உத்தியோகபூர்வமான தகவல் எதுவும் கிடைக்கவில்லை எனவும் — திருமலைப் பட்டணமும் சூழலும் பிரதேச செயலக வட்டாரங்கள் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தன. (இ-7)

## முழு நேர...

(முதலாம் பக்கத் தொடர்)

லங்கா முடித கப்பலில் கொண்டு வரப்பட்ட இந்த ஜெனரேட்டர்கள் பாதுகாப்பு வலயம் அமைந்துள்ள காங்கேசன்துறைப் பகுதியில் பொருத்தப்பட்டுள்ளன.

இம்மாதம் 5 ஆம் திகதி பரீட்சார்த்தமாக அவை இயங்க வைக்கப்படவும் உள்ளன.

இந்த 8 ஜெனரேட்டர்களும் இயங்கும்போது ஏற்படக்கூடிய பேரிரைச்சலே தற்பொழுது புதிய பிரச்சினையை உருவாக்கி இருக்கிறது.

ஜெனரேட்டர்கள் எழுப்பும் பேரிரைச்சல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கலாம் என்று கருதப்படுவதால் இவற்றின் சத்தத்தைக் குறைப்பதற்காக சிங்கப்பூரில் இருந்து ரூ. 60 லட்சம் செலவில் ''சைலென்ஸர்'' கருவிகள் வரவழைக்கப்பட உள்ளன.

இந்தக் கருவிகள் வந்து சேர்ந்து அவற்றை பொருத்தி மின்சாரம் வழங்கும் வேலைகளை ஆரம்பிக்க செப்டெம்பர் நடுப்பகுதி செல்லலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதே போன்ற ஜெனரேட்டர்களை கோட்டே ஜெயவர்த்தன புரவில் பொருத்துவதற்கும் முன்னர் நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன் பேரிரைச்சல் காரணமாகவே திட்டம் கைவிடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் 24 மணி நேரமும் மின்சாரம் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்பும் தற்பொழுது இயங்கும் வலு குறைந்த ஜெனரேட்டர்களும் பயன்படுத்தப்படும் என்றும்—

காங்கேசன் பிரதான மின் விநியோகத்தைப் பெற முடியாத சில பகுதிகளில் இவற்றைப் பொருத்தி இயங்கத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் —

இதே போன்றே சிறிய ஜெனரேட்டர்கள் கொழும்பிலிருந்து தேவைக்கு ஏற்ப வரவழைக்கப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## புலிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்)

அஹிம்சை வழியில் அதே இலட்சியத்தை முன்னெடுக்கிறோம்.

இராணுவ மேலாதிக்கத்தின் மத்தியில் ஒரு போதும் சிவில் நிர்வாகத்தை நடத்த முடியாது. மக்களுக்கு ஒரு நிம்மதியான வாழ்வை ஏற்படுத்தாத எந்த நிர்வாகத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இப்படி அவர் கூறினார்.

இந்தச் சந்திப்பில் ஈ. பி. ஆர். எல். எவ். உறுப்பினர் த. சுபத்திரன், மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் ஆகியோரும் மாநகரசபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (இ-5)


நீரு ரியூசன் சென்ரர்

A / L 2000

PHYSICS

அலைகளும் அதிர்வுகளும்

ஆரம்பம்: 03-08-98

(திங்கள் 5 — 6 மணி)

T. சம்பந்தன்

(58046)



கொடிகாமம்

அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச்சபை

பொதுப்பணியில் ஆர்வமுள்ளோர் அனைவரும் மேற்படி வைத்தியசாலையின் அபிவிருத்தியையும், மக்கள் இலகுவாக வைத்திய சேவை பெறுதலையும் கருத்திற் கொண்டு பின்வரும் வங்கிக்கணக்கில் அபிவிருத்தி நிதியை இடவும்.

கொடிகாமம்

வைத்தியசாலை அபிவிருத்திச்சபை

மக்கள் வங்கி, சாவகச்சேரி.

சேமிப்பு கணக்கு இல. 17512

(58014) நிர்வாகக் குழுவினர்


## கந்தளாயில்...

(முதலாம் பக்கத் தொடர்)

டது.

200 பேர் வரையில் கந்தளாய் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பணிமனைக்கு முன்பாகக் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அங்கு வந்த பொலீஸார் அவர்களைக் கலைந்து போகுமாறு பணித்தனை தயடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

ஆளுநரின் பணிமனை திருகோணமலையில் உள்ள போதிலும் அவர் அநேக நாள்கள் கொழும்பில் நங்கியுள்ள [illegible] வருக்குத் தெரியப்படுத்த [illegible] டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (இ-9-10)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02-08-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org